ஸர் நே. 1

ஸ்ரீ:

நிர்வாண

நன்மைகள்

52 பக்கங்கள் விலை 1 அணா

அத்தியாயங்கள்.

1. மேல் நாட்டில் நிர்வாண சங்கங்கள்.
2. நிர்வாணம் விபசாரத்திற்கு இடமளிக்குமா?
3. நோக்கத்தைப் பொறுத்தே மனம்.
4. ஒன்றுக்கு முதவாப் பெண்கள்.
5. ஸ்நானத்தின் அவசியம்.
6. மர்மஸ்தானங்கள் கேவலமானவையல்ல.
7. மேல் நாட்டுப் பெண்ணும் கீழ் நாட்டுப் பெண்ணும்.
8. வைராக்யம் யாது?
9. திடசித்தம் வேண்டும்.

PUBLISHED AT

THE INDIAN PUBLISHING HOUSE

RAMAMURTY NAGAR

BOMMIDI P.O. 1937 SALEM DT.

(All Rights Reserved)

64-பக்கங்களுடனும்
கண்ணைக் கவரும் பிளாக்குகளுடனும்
நமது பிரசுராலயத்திலிருந்து

நிர்வாண பூஜை

(விலை 1 அணா)

என்னும் நூல் வெளிவரும்.

1. ரூப சௌந்தர்யமுள்ள கன்னிகையை நிர்வாணமாக நிறுத்தி செய்யவேண்டிய பூஜை.

2. மேல் நாட்டுப் பெண்களின் தற்கால நிலைமை.

3. சம்மதக் கலியாணம், இச்சைப்படி அனுபவித்தல், கர்ப்பத்தடை கொள்கைகள்.

4. பாரத நாட்டு வீரப் பெண்களின் தூய வாழ்வு.

5. இந்திய சுதேச மன்னர் ஒருவரிட தேசபக்தி. இன்னும் இவைபோன்ற விஷயங்கள் இந்நூலில் காணப்படும்.

சொற்ப காபிகளே அச்சிடப்படுவதால் தனிக் காபிகள் வேண்டுவோர் இரண்டணா ஸ்டாம்பு அனுப்பிவைத்தால், பிரசுரமானவுடன் பிரதி ஒன்று அனுப்பப்படும்.

ஏஜெண்டுகளாயிருக்க விரும்புவோர் நிபந்தனைகளுக் கெழுதுங்கள்.

இந்தியன் பிரசுராலயம்
ராமமூர்த்தி நகர்
பொம்மிடி போஸ்டு, சேலம் ஜில்லா.

ஸ்ரீ:

ஆரோக்ய மலர் நே. 1

நிர்வாண நன்மைகள்

ஆசிரியர் :

K. வெங்கட ராவ்

PUBLISHED AT

THE INDIAN PUBLISHING HOUSE

RAMAMURTY NAGAR

BOMMIDI P.O. 1937 SALEM DT.

(All Rights Reserved)

ஸ்ரீ:

முகவுரை

உலகியலறிவை அடைதல் அத்யாவசியமென்பதை அறிவுளோர் அனைவரும் ஒப்புக்கொள்வர். உலகில் புதுப் புது இயக்கங்கள், புதுப்புது கொள்கைகள், புதுப்புது அபிலாஷைகள் தோன்றுகின்றன. சிற்சில இயக்கங்களால் சமுதாயம் முன்னேறுகிறது; வேறு சிலவற்றால் சமுதாயம் பின்னடைகிறது. சில கொள்கைகள் அனுபவத்தில் சாத்யப்பட்டவை; வேறு சில அனுபவ சாத்யமில்லாதவை. சில இயக்கங்கள் மனிதன் வாழ்வை படிப்படியாய் அமர வாழ்விற்குச் செலுத்துபவை; வேறு சில, மனிதன் வாழ்வை வெறும் மிருக வாழ்வின் மட்டத்திற்குக் கொண்டுவருபவை. உதாரணமாக, சென்ற நூற்றாண்டின் உலக படத்திற்கும், இந்த நூற்றாண்டின் உலக படத்திற்கும் வித்தியாசம் காணலாம். சில தேசங்கள் சிதறியடிக்கப்பட்டுள்ளன; வேறு தேசத்தினருக்கோ, கொடுங்கோன் மன்னருக்கோ அடிமைப் பட்டுக் கிடந்த சில தேசங்கள் இப்போது சுதந்திரம் பெற்று விளங்குகின்றன. சமூக விஷயங்களிலும் இவ்வாறே; நமது நாட்டு நடப்பையே நோக்குங்கால், கணவனையிழந்த இளங் கைம்பெண்கள் (பால்மணம் மாறா பச்சிளங் குழந்தைகளாயினும்) வேறு கணவனை மணக்கும்

பாக்யமிழந்து நரக வாழ்வு வாழவேண்டுமென்றிருந்த கோட்பாடு மறைந்து, இப்போது சிறுகச் சிறுக இளங் கைம்பெண்களுக்கு ஒருவாறு விமோசனம் அளிக்கப்பட்டு வருகிறது. தீண்டத்தகாதவர், அணுகத்தகாதவர், பார்க்கத்தகாதவர், கோயிலுள் செல்லத்தகாதவர் என்று நாயினுங் கடையராய் நடத்தப்பட்டு வந்த மக்கள் பொது ரஸ்தாக்களில் செல்லலாம்; பொதுக் கிணற்றில் ஜலம் இறைத்துக்கொள்ளலாம்; பிற ஜாதிப் பிள்ளைகளோடு சம அந்தஸ்துடன் பள்ளி பயிலலாம் என்னும் உரிமைகள் வழங்கப்பட்டு இப்போது திருவாங்கூர் சமஸ்தானத்து ஸ்ரீ அனந்தபத்மநாப ஸ்வாமி கோயிலுக்குள்ளும் சென்று ஆண்டவனை கண்ணாரக்கண்டு உள்ள மகிழலாம் என்னும் மகத்தான விடுதலை உரிமையடைந்து விட்டனர். நமது நாட்டின் சமூக வாழ்வில் இவ்வளவு மாறுதல்கள் என்றால் மேல் நாட்டு சமூக வாழ்வில் ஏற்பட்டுவரும் மாறுதல்களைப்பற்றியும், நாள்தோறும் தோன்றும் இயக்கங்களைப்பற்றியும் கேட்கவேண்டியதில்லை.

புதிய இயக்கங்கள், புதிய கொள்கைகள் என்றால் பழையகாலத்து சம்பிரதாயங்களில் ஊறிக்கிடந்த மக்களுக்கு தலை கிறுகிறுக்கும்; முதன் முதலில் எதிர்பாராத எதிர்ப்பு தோன்றுவதும் இயல்பு. நாளா வட்டத்தில் காலசக்கிரம் சுழலும் உத்வேகத்தில் புதிய இயக்கங்களுக்கு ஆதரவு அதிகரித்து இவைகள் சர்வ சாதாரணமாய் மனிதன் தினசரி வாழ்வில் இவனுக்கும் தெரியாமல் புகுந்து விடுகின்றன. ஏனென்றால் கால சக்கரத்தின் மகிமை! அவ்வளவுதான் சொல்லலாம். இவ்வகையான வேதாந்தம் ஒருபுறமிருக்க,

மனிதன் தினசரி வாழ்வைப் பொறுத்து உலகில் தோன்றி யுள்ள இயக்கங்கள் என்னென்ன ? அவைகள் பற்பல.

முதலாவது, கர்ப்பத்தடை ; இரண்டாவது, கலியாண முறைகளில் மாறுதல்கள் ; மூன்ருவது, ஆரோக்யத்தைக் கருதிய பரிபூர்ண நிர்வாண வாழ்வு. இம்மூன்று தலையங்கங் களின் கீழ், பலவகை விஷயங்கள் உள. இவைகளின் அடிப் படை தத்துவங்களைப்பற்றி நம் நாட்டு மக்கள் நன்கறிந்து அவரவர்களே சீர்தூக்கிப் பார்த்துக்கொள்ளும் பொருட்டு குறைந்த விலையில் சிறு சிறு நூல்களை பிரசுரிக்கலாம் என் றெண்ணுகிறேன். இவை உடலறிவையும், உலகியலறிவை யும் ஊட்ட வல்லதாதலின் ஆண், பெண், சிறுவர், வயோதிகர் அனைவரும் படித்துப் பயன்பெறலாம். நாம் அல்லும் பகலும் இடைவிடாது கவலையுடன் கவனித்து வரவேண்டிய தும், ஆண்டவன் கோயிலாகக் கொண்டதுமாகிய திரேகத் தின் கோளாறுகளைப் பற்றி முக்கியமாகக் கவனிக்கவேண்டி யது ஒவ்வொருவர் கடன். சகல அறங்களுக்கும் அஸ்தி வாரத்தைப் போன்ற இல்லறம் இன்பமயமாக வேண்டின், இல்லற இன்பத்தின் நுட்பத்தைப்பற்றியும், விதிகளைப் பற்றியும் அறிந்து நடக்கவேண்டியது அத்யாவசியம். ஆண் பெண் கலப்பு என்பது ஆண்டவன் நமக்களித்த அபூர்வ இன்பங்களில் முதன்மையானது. கடவுளின் சட்டப்படி நாம் இவ்விஷயத்தில் நடந்தேயாகவேண் டும். இன்றேல் தண்டனை கைமேலாகக் காத்திருக்கிறது. இது தவிற, மேல்நாடுகளில் இன்றைக்குத் தோன்றியிருக் கும் ஓர் இயக்கம் நாளையதினம் நம் நாட்டிலும் காலடி

வைத்தே தீரும். "நிர்வாணமா? கர்ப்பத்தடையா? சே! சே!! வேண்டாம். அந்தப் பேச்சே எடுக்கவேண்டாம்," என்று கண்களை மூடிக்கொள்ளமுடியாது. நிர்வாண இயக்க சங்கம் பீஹாரிலும் ஏற்படப் போகிறதென்று அஸோஸியேடட் பிரஸ் தந்தி பேசிக்கொண்டிருக்கிறதைக் கேளுங்கள். ஆகவே, உலக இயக்கங்களைப்பற்றி சாத்தியப்பட்டவரையில் நாம் முதலில் தெரிந்து கொள்ளவேண்டும். அதன் பின்னர், அவை நம் நாட்டு நாகரீகத்திற்கும், கலைக்கும், புராதன ஒழுக்கங்களுக்கும், அவதார உதாரண புருஷர்களுக்கும் ஒத்தவையா அல்லவா என்பதைச் சீர்தூக்கிப் பார்க்கவேண்டும். அறிவு வளர்ச்சிக்கான துறையில் மூளையைச் செலுத்துவது யென்னும் குறிக்கோளுடனேயே எந்த இயக்கத்தைப் பற்றியும் சாதக பாதகத்தைத் திணிக்க நான் முன்வரவில்லை. ஆணும் பெண்ணும் சேர்ந்து நடத்தும் இல்லற இன்பவாழ்வில் உள்ள கடவுளின் சட்டத்தைப்பற்றியும், மேல்நாட்டு அறிவாளிகள் துவக்கியுள்ள இயக்கங்களைப்பற்றியும் சிறு சிறு நூல்கள் இந்தியன் பிரசுராலயத்திலிருந்து வெளிவரும். அன்பர்கள் ஆதரிப்பார்களாக! கலைமடந்தையும் திருமடந்தையும் ஆசி கூறுவார்களாக!

K. வெங்கட ராவ்,

10-2-1937. பிரசுரகர்த்தர்.

ஸ்ரீ:

நிர்வாண நன்மைகள்.

அத்தியாயம் 1.

மேல் நாட்டில் நிர்வாண சங்கங்கள்

ஆண்டவன் தனக்குக் கோயிலாகக் கொண்டிருக்கும் நமது உடலை வெகு ஜாக்கிரதையாய்ப் பார்த்துக்கொள்ள வேண்டும். குறைவற்றதும், நிகரில்லாததுமான செல்வத்தை யடையவேண்டுமாயின் நோயற்ற வாழ்வையே தேடவேண்டும். மனவுறுதி வேண்டுமாயின் உடலுறுதி வேண்டும். வாழ்வில் ஓர் இன்பமும், செய்யும் காரியங்களில் ஊக்கமும் அடையவேண்டுமாயின் உடல் உறுதியும், ஆரோக்ய வாழ்வும் அவசியம் வேண்டும். ஆரோக்ய வாழ்வை அமரவாழ்வென்று அழைத்தாலும் தகும். இத்தகைய அமர வாழ்வைப் பெற மேல்நாட்டினர் பற்பல முயற்சிகள் செய்துவருகின்றனர். மேல்நாட்டு ஆணும் பெண்ணும் முயற்சிக்காத தொழிலில்லை; ஈடுபடாத வித்தையில்லை; எதற்கும் "நான்" என்று மார் தட்டி முன்வராத விஷயமில்லை. அறிவு வளர்ச்சிக்கும் முந்துகின்றனர்; உடல் உறுதிக்கும் முன்வருகின்றனர்; உலகத்தையே பிரமிக்கச் செய்யும் இயக்கங்களைத் துவக்குவதற்கும் "முதல் தாம்பூலம் கொடு" என்கின்றனர்.

ஓர் இயக்கம் அறிவு வளர்ச்சிக்கும், உடல் உறுதிக்கும் ஆக்கமளிக்கிறதென்று தெரிந்தவுடன் மேல்நாட்டார் பிறர் நகைப்பைப்பற்றியும் அக்கறை கொள்வதில்லை; ஏளனம் செய்வார்களென்னும் ஏக்கமும் அடைவதில்லை. காற்ருேட்டத்திலும், சூரிய வெப்பத்திலும் பரிபூர்ண நிர்வாணமாய் வாழ்வது திரேக ஆரோக்யத்திற்கு சாதகமாயிருக்கிறதென்று மனதிற்குப் பட்டவுடன் மேல்நாட்டு அறிவாளி உடனே காரியத்தைத் துவக்கிவிட்டான். பிறரைப் பற்றியும், பிறர் அபிப்பிராயங்களைப்பற்றியும் அவனுக்குக் கடுகளவும் அக்கரையில்லை. இதுவே அவனிட முன்னேற்றத்திற்கு சரியான அஸ்திவாரக் கல்.

நிர்வாண இயக்கம் இப்போது ஜெர்மனி, பிரான்ஸ், இத்தாலி, அமெரிக்கா, இங்கிலாந்து முதலிய நாடுகளில் வேரூன்றி விட்டது. பரிபூர்ண நிர்வாணம் அனுபவிப்பதற்கு ஏற்றபடி சங்கங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இச் சங்கங்கள் பெண் விகாரமடைந்த மைனர்களால் ஏற்படுத்தப் பட்டவையல்ல; காமப் பித்தர்களால் ஆதரிக்கப்படுவதல்ல; அறிவிற் சிறந்த பெரியோர்கள் இச் சங்கங்களை ஸ்தாபித்துள்ளனர்: இது நல்லது, இது கெட்டது என்று சீர்தூக்கிப் பார்க்கும் தன்மையுடைய அறிவாளிகள் இச் சங்கங்களுக்கு ஆசிகூறியுள்ளனர். சிறுவர் முதல் வயோதிகர் வரையில் இச் சங்கங்களில் சேர்ந்து ஒத்துழைக்கின்றனர். ஆகையால், இச் சங்கங்களால் நன்மையே கிடையாது என்று நாம் ஒதுக்கித் தள்ளுவதற்கும் இல்லை. இது சுத்தபைத்தியம் என்று பேசுவதற்கும் இல்லை. இதில் உள்ள அடிப்படை தத்துவங்களையும், கொள்கைகளையும் ஆராய்ந்து குறித்துக் கொள்ளுதல் நலம்.

இச் சங்கங்களில் நிர்வாண வாழ்வு வாழ்வது ஆரோக்யத்திற்காகவே. ஆண்கள் மட்டும் தனியாய் வாழ்கிருர்களா? அல்ல. ஆண்களும் பெண்களும் கலந்தே பரிபூர்ண

நிர்வாணத்துடன் (பிறந்த மேனியுடன்) வாழ்கிறார்கள். "இது எப்படி ஐயா? ஸ்நான அறையில் நாம் தனித்திருக்கும்போது உடுத்த வேஷ்டியைக்கழற்றி வேறு வேஷ்டியை மாற்றுங்கால், ஓர்விநாடி நிர்வாணமாயிருக்கவும் நமக்குக் கூச்சமெடுக்கிறதே! இவர்கள் எவ்வாறு ஆண் பெண் கலந்த கூட்டத்துள் பரிபூர்ண நிர்வாணமாயிருக்கமுடியும்" என்று நீங்கள் கேட்கலாம். இதற்கு விடைகூறுமுன் இச் சங்கங்கள் எவ்வாறு அமைக்கப்பட்டுள்ளனவென்பதைக் கவனிப்போம்.

நகர எல்லைக்கு வெளியே ஏகாந்தமானதோர் இயற்கை வனப்புமிக்க இடத்தில் நாற்புறமும் மதிற்சுவர்கள் எழுப்பப்பட்ட இடத்தில் இச் சங்கங்களின் கட்டடங்கள் உள்ளன. உள்ளே பசும்புல் தரைகள் என்ன, தடாகங்கள் ஏரிகள் போன்ற நீர்நிலைகள் என்ன, சுகந்தம்வீசும் நறுமலர் பூக்கும் நந்தவனங்கள் என்ன, மனதிற்கு இன்பமளிக்கும் செடி கொடிகளென்ன, எல்லாம் இவற்றுள் உண்டு. ஆண், பெண் நிர்வாணிகள் கலந்துண்ண போஜனசாலைகள்; காற்பந்து (Foot ball), கைப்பந்து (Tennis court) ஆட சமதரைகள், குதிரைசவாரிக்கேற்ற சமவெளிகள், இவையனைத்தும் உண்டு. இச் சங்க முதல் வாசற்படியில் நுழைந்ததும், ஆண் பெண் எவராயினும், ஆடைகளை பரிபூர்ணமாகக் கழற்றி எறிந்துவிட்டே உள் நுழையவேண்டும்.

ஆடைகளைக் கழற்றிவிடுவதென்றால் வெட்கம் நம்மை பிடுங்கித் தின்றுவிடாதாயென்று வாசகர்கள் நினைக்கலாம். வெட்கமும் கூச்சமும் நம்மைக் கொன்றுவிடும் என்பதை ஒப்புக்கொள்ளவேண்டியதுதான். ஆனால் எல்லாம் பழக்கத்தைப் பொறுத்திருக்கிறது. முற்காலங்களில் அதாவது, கிளாஸ்கோ மல்லும், ரயில் வண்டியும், ஆகாயக் கப்பலும், கிராமபோனும், பீரங்கி குண்டுகளும், எலெக்டிரிக் காந்த விளக்குகளும் வருவதற்கு முன்னே நமது முனி சிரேஷ்டர்

கள் மரவுரி தரித்திருந்தனர் என்பதை நாம் புராணங்களில் படித்திருக்கிறோமல்லவா ? அதற்கும் முன்னே, கற்பனு சக்திக்கும் எட்டாத காலத்தில், மானிடர் நிர்வாணமாய்த்தான் திரிந்திருக்கவேண்டும். அதன்பின், மரப்பட்டைகளையோ, இலைகளையோ வைத்து மர்மஸ்தானங்களை மட்டும் மறைத்துக்கொண்டு வாழ்ந்தனர். நூற்றுண்டுகள் கழியக்கழிய நூதனங்கள் பெருகலாயின.

தற்காலத்திய உதாரணம் ஒன்று. உங்கள் மனதை சுமார் 30-வருஷங்களுக்கு முன்பு அதாவது 1907-ம் வருஷத்திற்குச் செலுத்துங்கள். கிராப்புத்தலையுடன் யாரைப் பார்க்கலாம் ? வெள்ளைக்காரர்கள், நூற்றுக்கு ஒரு கிறிஸ்தவர், சிற்சில மலயாளிகள் இவர்களைத்தவிர வேறு யாரையேனும் கிராப்புத்தலையுடன் பார்க்கக்கூடுமா ? இல்லை. இப்போது கிராப்புத்தலையில்லாதவன் சேர்வருயன்மலை மலயாளனைவிட ஆயிரம்மடங்கு கேடுகெட்ட முட்டாள் என்று நினைக்கும்படியாய் சுழன்றுவிட்டது நாகரீக காலசக்கிரம். சாதாரண கிராமவாசி ஏழைக்குடியானவன் கையகலத்துண்டினுல் கோவணம் தரித்துக்கொண்டு ஊர் ஊராய்த்திரிகிறுன். கலியாணங்களுக்கும், விருந்துகளுக்கும் சர்வசாதாரணமாய்ச் செல்லுகிறுன். பெரிய கலெக்டரிடமும் இதே கோலத்துடன் வெகு கம்பீரமாகச் செல்லுகிறுன். அவனைப்போல் நாம் போக முடியுமா ? மேலுக்கு வேஷ்டியில்லாமல் (கீழுக்கு வேஷ்டியுடுத்தியே) ஊரை ஒருமுறை சுற்றிவந்தால் ரூ. 100 இனும் என்றுலும் நாம் இனும்பெற சம்மதிக்க மாட்டோம். ஏன் ? பழக்கம் காரணம். திரேகத்தை மூடிமூடிப் பழகிய நாம், மூடாமல் வெளியே செல்வதாஞல் வெட்கம், கூச்சம். பழகிவிட்டால் எதுவும் சர்வ சாதாரணம்.

நம் தென்நாட்டு மலையாளிகளிட பழக்கத்தில் ஒன்றை இங்கு குறிப்பிடுவது பொருந்தும். அவர்களில் ஆண்,

பெண் சகலரும் காலை, மாலை இரு வேளையும் ஸ்நானம் செய்வது சகஜம். ஆண்களைப்போல் பெண்களுக்கும் நாலு முழத் துண்டு ஒன்று இருந்தால் போதுமானது. மார்பை மூடித் தான் தீரவேண்டுமென்னும் கட்டாயம் கிடையாது. இவர்கள் ஸ்நானம் செய்யும் தடாகத்திற்கு நமது மனத்தைச் செலுத்துவோம். இங்கே பெண்கள் ஓர்புறம் முழுக்காடு இடுகின்றனர். இதற்கடுத்தபடியாகவே ஆண்களும் ஸ்நானம் செய்கின்றனர். நூற்றுக்கணக்கான பெண்டீர் முற்றிலும் நிர்வாணமாகவே ஸ்நானம் செய்கிறார்கள். இதோ பக்கத்திலேயே ஆண்களும் நூற்றுக்கணக்கில் ஸ்நானம் செய்கின்றனர். நிர்வாணப் பெண்டிரை யாரேனும் உற்றுப் பார்க்கின்றனரா? இல்லை. தமது நிர்வாண கோலத்தை யாரேனும் பார்க்கிறார்களா இல்லையா என்பதையேனும் பெண்டிரும் கவனிக்கிறார்களா? இதுவுமில்லை. ஸ்நானம் முடிந்தவுடன், அதோ ஈரத்துண்டு கட்டி பெண்கள் நடப்பதைப் பாருங்கள். கட்டியிருக்கும் துண்டு ஈரமாதலால் அவயவ அமைப்பு ஒருவாறு கண்களுக்குப் புலப்படுகின்றன. மார்பை ஒருவாறு மூடிச் செல்லும் பெண்கள் சிலர். மூடாமலேயே செல்லும் பெண்டீர் பலர். திரண்ட கனிகளை எவரேனும் பார்த்து விடுவார்களென்னும் அச்சம் ஏதாவது இவர்களுக்கு உண்டா? இல்லவே இல்லை. வீட்டுக்குச் செல்ல வேண்டும் அல்லது கோயிலுக்குச் சென்று ஆண்டவனை தரிசிக்க வேண்டும் என்னும் ஆவல் அதிகத்தால் முன்னும் பின்னும் பார்க்காமல் செல்லும் மான்களைப் பாருங்கள். நாளைக்கு நமது பெண்களையும் இவ்வாறு போகச்சொல்லலாமா? வேண்டாமப்பா! பற்கள் உடைந்து போகும்.

எல்லாவற்றிற்கும் பழக்கமே காரணம். நிர்வாண வாழ்வும் அப்படியே. பல பேர் நிர்வாணமாய்த் திரியும் சங்க வெளியில் நம்மையுமறியாமல் நாம் நிர்வாணமாய் விடு

வோம். ஆடை உடுத்திய சபையில் ஆடை யில்லாதவன் ஓர் பைத்தியமானல், ஆடை உடுத்தாத சபையில் ஆடை உடுத்தியவனும் ஓர் பைத்தியம்தான். சரி, ஆண்களும் பெண்களும் கலந்து நிர்வாணமாய் இருக்கும் இடத்தில் சிலர் பந்தாடுவர், வேறு சிலர் நீந்துவர், வேறு ஆணும் பெண்ணும் நந்தவனத்தில் உலாவப் போவர், ஏகாந்தமாகப் பேசிக்கொண்டிருப்பர். சாதாரணமாக ஆடைகள் உடுத்தி யிருக்கும் போதே நமக்கு யௌவன கன்னிகையைப் பார்க்கும் போதும், பெண்ணழகிக்கு ஓர் திரண்ட வாலி பனைப் பார்க்கும் போதும் பற்பல எண்ணங்கள் உதிக்கின்ற னவே; முற்றிலும் நிர்வாணமாய்த் திரியும்போது என்ன கதி? விபசாரம் ஓங்கி விடாதா? என்று கேள்வி பிறக்க லாம். இதற்கு விடையைக் கவனிப்போம்.

அத்தியாயம் 2.

நிர்வாணம் விபசாரத்திற்கு இடமளிக்குமா?

ஆணும் பெண்ணும் நிர்வாணமாய்க் கலந்து திரிந்தால் விபசாரம் அதிகரிக்கும் என்று நாம் நினைக்கலாம். மனிதனுக்குள்ள சகல இச்சைகளிலும் மகா சக்தி வாய்ந்ததும், அடக்கவே சாதாரணர்களுக்கு சாத்தியமில்லாததும், எத்தகைய தியாகத்தையும் கஷ்டங்களையும் ஒரு துரும்பென நினைக்கச் செய்வதும் பெண்ணாசையே. இந்த ஆசையின் பேயாட்டம் அதிகரிக்க அதிகரிக்க இதைத் திருப்தி செய்து கொள்ளும் ஆசை வலுத்தால், பாடுபட்டுத் தேடிய பணம் போகிற தென்றாலும் அது ஒரு பொருட்டல்ல; இரவு பகலாய் நாம் பாதுகாத்துவரும் தேகத்திற்கு நோய் வந்து பாழ்படுத்து மென்றாலும் அது ஒரு பிரமாதமல்ல; உயிரே போகுமென்றாலும் அனுவசியம். இவ்வாறு மனிதனுக்கு மனோ திடத்தையும், எதையும் துச்சமாக நினைக்கச் சொல்லும் அலக்ஷியத்தையும், எது நேரினும் கொண்ட ஆசையை திருப்தி செய்துகொள்ளும் ஒரே ஒரு நோக்கத்தையும் அளிப்பது பெண் பித்து ஒன்றே.

ஒரு பெண்ணைப் பார்க்கும்போதே நமது தேகத்தில் ஒரு காந்தசக்தி பறக்கிறது. நமது மூளையைக் கலங்கவைக்கிறது. அனுபவிக்க ஆசையைத் தூண்டுதல் செய்கிறது. சாதாரணமாய்ப் பெண்களைப் பார்க்கும்போதேஇவ்வாறென்றால், பெண்ணொருத்தி பரிபூர்ண நிர்வாணமாயிருந்து அவ

ளிட திரண்ட அவயவங்களையும், அதன் மேலிருக்கும் காந்தி பிம்பத்தையும், உருண்ட கனிகளையும் கண்ணாரக் கண்டால் மனம் எவ்வளவு புளகாங்கித மடையும்? பஞ்சபூதங்களும் கரைகாணாது எவ்வளவு ஆனந்த மனுபவிக்கும்? இதைவிட கண்களுக்கு வேறு விருந்து வேண்டுமா? பரிபூர்ண நிர்வாண கன்னிகையின் சாயல் நமக்குக் கடவுளால் அளிக்கப்பட்ட ஆனந்த வஸ்துவின் ஒளியைக் காண்கிறோம். எப்பேறப்பட்ட முறடனையும் ஒரு கட்டுக்குள் அடங்கவைத்து "இல்லறம் நடத்து" என்று கைபிடித்திழுக்கும் மாந்திரீக வஸ்துவை இதோ இந்த பெண்பிம்பத்தில் காணலாம். உலகம் எதி லிருந்து அபிவிருத்தி யடைகிறது? உலகம் தழைக்கவும், மனிதன் இன்பசாகரமனுபவிக்கவும் கடவுளால் நிர்மாணிக் கப்பட்ட வஸ்து எது? அது இந்த நிர்வாண அழகு வடிவத் தில் காணப்படுகிறது.

மூடி மூடி வைக்கும் பொருளின் மீது எவருக்கும் ஆசை அதிகம். "இந்தப் பெட்டியில் ஏதோ ஒன்று இருக்கிறது; இதைப் பார்க்காதே" என்று நாம் சொன்னால் நாம் இல்லாத வேளையில் பூட்டை உடைத்தாவது பெட்டியிலுள்ளதை ஒருமுறை பார்த்துவிட்டு வைத்து விடலாம் என்று எவருக் கும் ஆசை ஏற்படுவது சகஜம். முரட்டு சேலை உடுத்திய பெண்ணைப் பார்க்கும்போது ஏற்படும் உணர்ச்சியைவிட மெல்லிய ஆடை உடுத்திய உருவத்தைப் பார்க்கும்போது உணர்ச்சி அதிகம். மெல்லிய ஆடை உடுத்தியுள்ள உருவத் தைப் பார்க்கும்போது, தொடைகளின் அமைப்பு, மார்பின் அளவு முதலியது தெரிந்தும் தெரியாமலும் கண்களுக்குப் புலப்படுகின்றன. பாதி தெரிந்து பாதி தெரியாமலிருக்கும் வஸ்துவிற்கு காந்தசக்தி அதிகம்; வசீகரண சக்தியும் அபாரம். சாதாரணமாக பெண் ஒருத்தி நடக்கும்போது காற்றின் வேகத்தில் ஆடை விலகி, மார்பின் ஒரு பாகமோ, கால்

களோ தெரிந்தால் இன்னும் சற்று எட்டிப்பார்க்கலாம் என்னும் ஆசையைத் தூண்டுதல் செய்கிறது. வேருெருத்தி மார்பை மூடாமலேயே எதிரில் வந்தால், இது அவ்வளவு அதிகமாக உணர்ச்சி யளிப்பதில்லை. அறைகுறை நிர்வாணத்தின் சக்தி பரிபூர்ண நிர்வாணத்திற்கு இல்லை. இது அனுபவம்.

மறைத்து மறைத்து வைக்கும் வஸ்துக்கள் பலவற்றை பார்க்கும்போது ஒன்றைப்போல்தான் மற்ருென்று என்று மனிதன் மனம் தெளிவடைவதில்லை. மறைபொருளாக உள்ளமட்டில் சந்தேகம் தீருவதும் கிடையாது; ஆசையும் பூர்த்தியானபாடில்லை. நிர்வாண சங்கத்துள்ளிருக்கும் ஸ்திரீ புருஷர்களுக்கு எல்லா சந்தேகமும் தீர்ந்துவிட்டன. பளிச்சென்று கண்ணின் எதிரே பார்க்கும் வஸ்துக்கள் அனைத்தும் ஒரே வண்ணம் என்று மனம் சிக்கலறிந்து விட்டது. மறைந்து கிடக்கும் வஸ்துவைப்பற்றி "எப்படி யிருக்கும்?" என்று எழும் கேள்வியானது, இப்போது கண்ணெதிரே வெளிப்படையாய் யாதொரு மர்மமுமில்லாமல் பார்க்கும்போது அந்தக் கேள்விக்கு இடமில்லை. திரை மறைவில் வைத்திருந்தபோது "எப்படி? என்ன? எது?" என்று மனத்தை சஞ்சலப்படுத்தி வந்ததுபோக இப்போது வெட்டவெளிச்சமாய்—பரிபூர்ண நிர்வாணமாய்—எந்த சந்தேகத்திற்கும் இடமின்றி கண்ணெதிரே நிற்கிறது.

மறைத்து மறைத்து வைத்துப் பார்த்துவந்த பொருள் இப்போது யாதொரு மர்மமுமின்றி பரிஷ்காரமா யிருப்பதால், முதன் முதலில் சற்று மனதை விகாரப்படுத்துமென்பது வாஸ்தவம். பார்க்கப்பார்க்க எல்லாம் சர்வ சாதாரணமாய் விடுகிறது. ஆடை உடுத்தியிருக்கும் ஜனங்களிடையுள்ள விபசார சம்பவங்களைப்போல், நிர்வாணிகள் சங்கத்துள் இல்லையென்பதே மேல் நாட்டார் அனுபவம். இப்

போதும் உலகில் சில பாகங்களில்—ஆப்பிரிக்கா காடுகள் போன்ற பிரதேசங்களில்—முற்றிலும் நிர்வாணமாகவே வாழ்கின்றனர். நாகரீகத்தில் அபிவிருத்தி அடைந்ததாக மீசை முறுக்கும் பிரதேசத்தினரிடை பாவியுள்ள விபசாரம், மேற்குறித்த நிர்வாணிகளிடை காணப்படுவதில்லை யென்பதே அநுபவசாலிகளின் முடிவு. ஆகவே நிர்வாணத்திற்கும் விபசாரத்திற்கும் சம்பந்தமில்லை. எனினும் உணர்ச்சியைக் கொடுக்கக்கூடிய மர்மஸ்தானங்களை கண்ணெதிரே கண்டால், ஓர் உணர்ச்சியாவது உண்டாகுமா அல்லவா? இதற்கு விடையைக் காணவேண்டுமாயின் இச் சங்கத்தினரின் அபிலாஷைகளையும் குறிக்கோளையும் கவனிக்கவேண்டும்.

அத்தியாயம் 3.

நோக்கத்தைப் பொறுத்தே மனம்

தாய் நாடு விடுதலையடைய வேண்டுமென்னும் கொழுந்து விட்டெரியும் தேசபக்தி ஆவேசத்துடன் சட்டசபை புகுவோன் மந்திரி ஸ்தானம் வகிக்க நேரிட்டாலும் மாதம் ஐயாயிரம் சம்பளத்தின்மேல் கவனமாயிருக்கமாட்டான்; விருந்துகளுக்கும் விருப்புடன் செல்லமாட்டான்; மாலைகளின் பேரிலும் உபசாரப் பத்திரங்களின் பேரிலும் மோகங் கொண்டு அலையமாட்டான். இவனிட நோக்கம் ஒன்றே; **தேசவிடுதலை, குடிகள் துயர் நீக்கல்.** அதுபோலவே ஆயிரக்கணக்கான மக்கள் சேர்ந்து இறைச்சலிடும் சந்தையின் நடுவே உட்கார்ந்திருந்தபோதிலும் ஐம்புலன்களையும் அடக்கும் சக்தியைப் பெற்ற வேதாந்தி ஸ்ரீ பகவானிட பாதகமலங்களையே நினைத்து நினைத்து பகவானை தனது தொண்டனுக்கிக் கொள்வான். திடமான நோக்கம் ஒன்றுண்டாயின், மனிதன் அந்த நோக்கத்தை கடைக்கண்ணுல் பார்த்துக்கொண்டே வேலை செய்கிருன்.

நிர்வாண கோலத்துடன் ஒரு பெண்ணைப் பார்க்குங்கால், அவளிட மர்மஸ்தானங்களைப் பார்க்க பார்க்க அதே வண்ணம் நிர்வாண கோலத்துடன் இருக்கும் ஆடவன் மனதில் பலவகை காம விகாரங்கள் தலை விரித்தாடுமே யென்று சிலர் நினைக்கலாம். இது விபசாரத்திற்கும் சௌகரிய மளிக்குமே யென்று கேட்கலாம். இது அவ்வாறல்ல. பார்க்காத வஸ்துவை, மர்மமாக மூடி மூடி வைத்

துள்ளதைப் பார்த்துவிட்டால்தான் திரேக முழுவதும் ஓர் காந்த சக்தி பாய்கிறது. உதாரணமாக ஓர் டாக்டரை எடுத்துக்கொள்வோம். இவர் எத்தனையோ கேஸ்களில் பெண்களிட மர்மஸ்தானங்களேயே பார்த்துப் பரிசீலனை செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் நேரிட்டுவிடுகிறது; பெரிய குடும்பத்து யௌவனப் பெண்ணை தனிமையில் சந்தித்து அவளிட திரேகக் கோளாறுகளேப்பற்றி வெட்ட வெளிச்சமாக பேசி அறிந்து, பரிசீலனையும் செய்யவேண்டியதாகிறது. எனினும் டாக்டரை எவரேனும் சந்தேகிக்கிறார்களா? இல்லை. டாக்டர்களும் போக்கிரிகளாயிருந்து நல்ல பெயர் வாங்க முடியாது. காமப் பித்தனுகிய டாக்டர் லவலேசமும் அபிவிருத்தி யடைய முடியாது. மேல் நாடுகளில் படம் எழுதும் தொழிலேப்பற்றி சற்று விளக்குவோம். விளம்பரங்களுக்காகவும், சினிமா படங்களுக்காகவும் சர்வ லக்ஷணமும் அமையப்பெற்ற படங்களே எழுத வேண்டியதாகிறது. உண்மையான வடிவம் கண்ணெதிரேயில்லாமல் படம் எழுதுவது சாத்யமல்ல. அதனுல் படம் எழுதுவோன் தனக்கு எவ்வகையான அவயவ லக்ஷணங்களே யுடைய வடிவம் வேண்டுமோ அவ்வகையான பெண்ணை தேடிப் பிடிக்கிறுன். அவளுக்கு நூற்றுக்கணக்கான பவுன்களேக் கொடுக்கிறுன். எவ்வகையான படம் தனக்குத் தேவையோ அவ்வகையாக அப்பெண்ணை நிறுத்திவைப்பான். பரிபூர்ண நிர்வாணமாகவோ, பாதி நிர்வாணமாகவோ தனக்குப் படம் வேண்டியவகையாக அவளே இருக்கச்சொல்வான். பிறகு அந்த உருவத்தைப் பார்த்துக்கொண்டே இவன் படம் எழுதுவான். ஒரு நாளின்பேரில் 2, 3 மணி நேரம் அந்தப் பெண்ணும் அவன் சொல்வதுபோல் அசையாமலிருக்கவேண்டும்; இவனும் இமைகொட்டாமல் பார்த்துக்கொண்டே படம் வரைவான். ஒரு படம் முடிவுபெற எத்தனையோ நாட்களும்

மாதங்களும் சென்றுவிடும். அத்தனை நாட்களும் குறித்த வேளையில் அந்தப்பெண் இவனிட அறைக்கு வரவேண்டும்; அவன் சொல்லும்போது திரும்பிப்போகவேண்டும். இவ்வாறு படம் எழுதும் வேளைகளில் படம் எழுதுவோனைத் தவிற வேறே எவரும் நுழைய முடியாது. படம் எழுதுவதையே தொழிலாகக் கொண்டவர்களுக்கு பெண்களை நிர்வாணமாய் நிறுத்தியவுடன் வேறே எந்த நோக்கமும் கிடையாது; எதிரேயுள்ள வடிவத்தைப்போல் நமது படம் அமைய வேண்டுமே யப்பா என்னும் கவலையால் இவனிட மூளையில் எந்த துர்எண்ணமும், திரேகத்தில் சலசலப்பும் உண்டாவதில்லை. ஏதாவதோர் பெண்ணிடம் போக்கிரித்தனமாய் இவன் நடந்துகொண்டால் இவனுக்குப் படமும் அமையாது; வேறெந்த பெண்ணும் இவனிட தொழிலுக்கு இசைந்து வரமாட்டாள்; இவனிட ஜீவனோபாயம் கெட்டு, மிகுந்த லாபகரமான தொழிலையே கைவிட வேண்டியதாய் விடும்.

படம் எழுதுவோனுக்கு வேறோர் அநுபவம். மேல் நாடுகளில் பெரிய கோடீஸ்வரனிட மகளோ, மனைவியோ தன்னை நிர்வாணமாக நிறுத்தி படம் எழுதிக்கொடுக்கச் சொல்வாள். "படம் எழுதும்போது என்முகம், வயிறு, கால்கள் இருக்கலாம்; ஸ்தனங்களைமட்டும் எழுதாதே" என்று சொல்வாள். இதன்படியே ஸ்தனங்களை மட்டும் விட்டு மற்ற அவயவங்களை உள்ளபடியே எழுதவேண்டும். முடிந்தவுடன் திரண்ட ஸ்தனங்களாகப் போட்டுக் கொடுக்கச் சொல்வாள்; அவளிட கோரிக்கைப்படி திரண்ட ஸ்தனங்களுள்ள பெண்ணைத் தேடிப் பிடித்து, அவளிட ஸ்தனங்களைப் பார்த்துக்கொண்டே முன்கூறிய உருவத்தை முடிக்க வேண்டும். படம் எழுதுவது மேல்நாடுகளில் மகா லாபகரமானதும் கௌரவம் வாய்ந்ததுமான தொழில். பெயரைக்

கெடுத்துக்கொண்டு குட்டிச்சுவராய்ப்போக எந்தபடம் எழுது வோனும் மனமிணங்கமாட்டான். படம் எழுதும் இவ னுக்கோ எழுதும் படத்தின் பேரிலேயே கவனமிருக்குமே யல்லது, வேறு கெட்ட எண்ணமே உண்டாவதில்லை.

மேற்குறித்த உதாரணங்களைப் போலவே நிர்வாண சங்கங்களிலும் ஆடவரும் பெண்டிரும் நிர்வாணமாகத் திரிந்த போதிலும், அவர்களிட நோக்கம் ஒன்றே; திரேக அமைப் பின் அபிவிருத்தி; ஆரோக்ய வாழ்வு. இதன் பேரிலேயே இவர்கள் கண்ணுங் கருத்துமாயிருப்பர். நிர்வாண சங்கத்தில் ஒரு ஸ்திரீ மிகமிக மெலிந்திருப்பாள்; வேறொருத்தி தடித் திருப்பாள்; ஒரு ஸ்திரீ சர்வ லக்ஷணமும் பொருந்தி பார்க் கும்போதே ஒவ்வோர் அவயவமும் கடித்துத் தின்றுவிட லாமா என்றிருக்கும்; வேறொருத்தியின் வயிர் ஆலிலை; துடை கள் யானையின் துதிக்கைகளைப்போல் வடிவமைந்திருக்கும்; தங்கக் கலச மார்புடன் இள மான்கள் துள்ளிக் குதிக்கும்; விகார ஸ்வரூபிகளும் இருப்பர்: ஆடவர்களும் திரேக மெலிந்து வலிமையற்று எலும்புந் தோலுமாயிருப்பர்; திரேக முழுமையும், மயிர்கள் அடர்ந்து விகாரமாயுமிருப்பர்: வேறு சிலர் வடிவழகும், அவயவ லக்ஷணமும், திரேகக் கட்டும் அமைந்து மன்மதாகாரமா யிருப்பர். இக்கூட்டத் துள்புகுந்த ஆண், பெண் ஒவ்வொருவருக்கும் மற்றவர்களைப் பார்த்துத் தமக்கும் திரேக லக்ஷணமும், திரேக காந்தியும், பரிபூர்ண ஆரோக்யமும் அடையவேண்டுமென்றே ஆசை தோன்றுமேயொழிய திரேகத்தை கெடுத்துக்கொள்ள மனம் இடம் கொடாது. துர்நீர் நிறைந்து திரேகம் ஊதிக்கிடக் கும் ஸ்திரீ புருஷர்கள் சிறுகச்சிறுக ஓட்டம் ஓடிப் பழகி துர்நீர் வெளியாக்கி திரேகக்கட்டு அடைவர். அவரவர் உடலை ரம்யப்படுத்திக்கொள்ளும் வகையில் விளையாட்டுகளிலோ, அப்பியாசங்களிலோ அவரவர் ஈடுபடுவர். இவ்வாறு ஒவ்

வொருவரும் திரேக ஆரோக்யத்தைக் கருதி யுழைப்பார்களேயொழிய கெட்ட எண்ணங்களை மூளையில் புகுத்திக் கொள்ளமாட்டார்கள். விபசாரம் செய்ய மனங்கொண்ட ஸ்திரீ புருஷர்களுக்கு இச் சங்கத்தில் இடம் கிடையாது; ஏதாவதோர் துராக்ரதமோ, போக்கிரித்தனமோ நடந்துவிட்டால் சம்பந்தப்பட்டவர்களை அடுத்த நிமிஷமே "கெல்தா" கொடுத்துவிடுவார்கள். இவ்வாறு பரிசுத்தமாயில்லாமல் இச் சங்கங்கள் விபசாரத்திற்கு இடமளிக்குமாகில், விபசார விடுதிகள் என்று இச் சங்கங்களை சம்மந்தப்பட்ட அரசாங்கத்தார் மூடிவிடுவார்கள்; இதை நடத்துவோருக்கும் "விபசார விடுதிகள்" சட்டப்படி தண்டனை கைமேலாகக் கிடைத்துவிடும். இச் சங்கங்களின் மேலான நோக்கங்களையும் அவற்றின் அனுபவ சாத்தியமான தன்மையையும் கவனித்து அரசாங்கங்களும் இவற்றை அனுமதித்து பிரசாரமும் நடத்திவர இடமளித்திருக்கின்றன. மேலும், இச் சங்கங்களில் கௌரவமான தொழில்களில் ஈடுபட்டவர்களும், நல்ல நடவடிக்கையுள்ளவர்களும் கலந்துகொண்டு வருவதே இதன் பரிசுத்த வாழ்விற்கு ஓர் சிறந்த அறிகுறியாகும். நிர்வாண வாழ்வினால் உண்டாகும் நன்மைகள் என்னென்னவென்பதைக் கவனிப்போம்.

அத்தியாயம் 4.

ஒன்றுக்கு முதவாப் பெண்கள்

வீட்டை விட்டு வெளியே தலைகாட்டாத பெரிய பணக்காரரின் பெண்களிட திரேக நிலைமை எப்படி யிருக்கிறதென்று நினைக்கிறீர்கள்? "பெரிய வீட்டுப் பெண்கள்" என்று பெயருக்கு ஜம்பமே தவிற சாதாரண கூலிப் பெண்களுடன் இவர்கள் போட்டி போட முடியாது. சாதாரண ஹரிஜனப் பெண்—ஒவ்வொரு நாளும் காட்டுக்குப்போய் ஒரு சுமை விறகு கொண்டுவந்து அதை இரண்டணாவிற்கு விற்றால்தான் கால் வயிறு கஞ்சியாவது உண்டு; இல்லாவிட்டால் இல்லை. இவளிட திரேக காந்தியையும், அவயவ லக்ஷணமும் நம்மைப் போன்றவர்களையே பிரமிக்கச் செய்துவிடும். பட்டிக்காட்டு ஹரிஜனப் பெண்—கூலிக்காரி இவர்களிட முகம் ஒருவாறு விகாரமாய் இருந்தபோதிலும் அவர்களிட மார்பின் லக்ஷணமும், திரேகக் கட்டும், அவர்களிட கருந்தோலின்மீது படர்ந்துள்ள மினுமினுப்பும் ஆச்சர்யப் படத்தக்கதாயிருக்கிறது. பெரிய வீட்டுப் பெண் வெளியே தலை நீட்டுவதில்லை; ஒரு சிறிய துரும்பும் எடுத்து அப்புறம் போட்டுப் பழகியவளல்ல; ஒரு தோண்டி ஜலத்தையும் இறைத்துப் பழகியவளல்ல; சூரிய வெளிச்சத்தையும், நல்ல காற்றோட்டத்தையும் அனுபவித்தவளல்ல. பெரிய வீட்டுப் பெண் பார்ப்பதற்கு வெம்பிப்போன பழத்தைப் போலவே யிருப்பாள். சிற்சில வீட்டுப் பெண்கள் நிழலில் இருந்து இருந்து, ஒரு காரியமும் செய்து பழகாமல், சோம்

பல் மிகுந்து உடம்பு விகாரத்தை கொடுக்கக் கூடியதாய் ஊதிப்போய்க் கிடப்பர். வேறு சிலர் நல்ல ரத்தம் சிறிதேனுமின்றி வெள்ளை நரம்புகள் திரேகத்தில் படர்ந்து எலும்புந் தோலுமாய்க் கிடப்பர். வேறு பலர் எப் போதும் ஒரு நோய் வைத்துக்கொண்டு டாக்டரை வர வழைத்து கையைக் காட்டிக்கொண்டு கிடப்பர். கலியாண மாகாத நிலைமையிலேயே இப் பெண்களுக்கு ஆயிரத்தெட்டு நோய்கள்; கலியாணமான பின்னரோ சொல்லவேண்டிய தில்லை. இரண்டொரு பிள்ளைகளைப் பெற்றுவிட்டால் இம் மங்கையரின் திரேக நிலைமை எவ்வளவு கோடிவகை கோளாறுகள் நிறைந்து விடுகின்றனவென்பது அனுபவ வைத்தியர்களுக்கு நன்கு தெரியும்.

பெரிய பெரிய ஜமீன்தார்களின் வீட்டிலும், பெரிய உத்யோகஸ்தர்கள் வீட்டிலும் குடும்ப வைத்தியராயிருப்பவர் களுக்கும், இவர்கள் வீட்டிலுள்ள சேவகர்களுக்கும் அல்லது பெரிய மனுஷாள் வீட்டில் பழகியவர்களுக்கும் இவ் வுண்மை அனுபவ பூர்வமாய் நன்கு தெரியும். என் நண்பர் ஒருவர் வீட்டிற்குச் சென்றிருந்தேன். சோபாவில் ஒரு பெண் உட் கார்ந்திருந்தாள். பார்த்தவுடன் அவளை எவரும் 35 வய திற்குக் குறைவில்லாமல் மதிக்கலாம். இரண்டு கன்னங் களும் இரண்டு மல்கோவா பழங்கள்தான்; கண்கள் இருக் கும் இடமே தெரியாமல் மறைந்திருந்தன. முழங்கா லுக்குக் கீழுள்ள கணுக்கால் என் துடைகள் அவ்வளவு தடித்திருந்தது. சுமார் இரண்டுகஜம் மல்லில் தான் ஒரு ரவிக்கை தைக்கலாம். இப் பெண்ணைப் பார்த்தபோது எனக்கே ஆச்சர்யமுண்டாயிற்று. கேட்கப்போனால் இப் பெண்ணின் வயது 13 தான்; கலியாணமாகவில்லை. இவள் மெத்தையைவிட்டுக் கீழே இறங்கி யறியாள். ஏதாவதோர் நாள் அடுத்த தெருவிற்குப்போக வேண்டுமென்றாலும்,

மோட்டார்தான். அருசுவை உண்டியுடன், நாள்பேரில் 2 டஜன் கமலா, அரை டஜன் சாத்துக்கொடி, திராக்ஷை, அனுஸ் முதலிய பழங்கள், இரவில் கம கம வென்று மணங்கமழும் காயச்சினபால். பின்னல் போடவும், சேலை கட்டவும், உடம்பு பிடிக்கவும் ஒரு தனி வேலைக்காரி. இவ்வளவு சுக மனுபவிக்கும் பெண்ணின் திரேக நிலைமைதான் என்ன? தன் திரேகமே தனக்குபாரம். உடம்பு முழுதும் 1-டன் துர்நீர் நிரம்பித் ததும்புகிறது. இவள் வேலை செய்யத்தான் லாயக்கா? பார்க்கத் தான் ரம்யமா? கணவன் இன்பசுகம் அனுபவிக்கவும் இவளிட திரேகம் சௌகரியமாயிருக்கிறதா? எப்படியோ சமாளித்து இரண்டொரு குழந்தைகளைப் பெற்று விட்டால் இவள் திரேகம் இன்னும் நாதாரியாய் விடும். இவளைக் கொண்ட கணவன் தன்னிச்சைப்படி இன்ப மனுபவிக்க சாத்தியப் படாமல் மனம் வாடிக்கிடக்க வேண்டும்; இன்றேல் வேறு ஸ்திரீயை நாட வேண்டும்.

மற்றுமோர் வகை உதாரணம். என் நண்பர் ஒருவருக்கு ஒரு டெப்டி கலெக்டரின் பெண் மனைவியாய் வாய்த்தாள். இவளைப் பார்த்தால் எலும்புறுக்கி வியாதியால் கஷ்டப்படுவதாகவே நினைக்க வேண்டும். மிக மெலிந்த திரேகம்; சதைப் பிடிப்பு என்பதே கிடையாது; திரேகத்தில் பலமும் தோலின்மீது காந்தியும் இல்லை. வெள்ளை வெளேரென்று சப்பியுமிழ்ந்த கரும்புச் சக்கைதான். வீட்டு வேலைகளைச் செய்ய தனித்தனி வேலையாட்களை வைக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஒருபுறமிருக்க, என் நண்பருக்குத் தன் பெண்ஜாதியுடன் மதன சுகம் அனுபவிக்கவேனும் சௌகரிய முண்டா? இல்லை. அவளிட திரேகம் இடங் கொடுப்பதில்லை. ஒரு நாள் அந்தம்மாள் இணங்கினாளாயின் மூன்று மாதங்கள் வரையில் அவளுக்கு உடம்பு சரிப்படுவ தில்லை. இதனிடையே ஒரு நூறு முறைகள் டாக்டர்

வீட்டிற்கு வந்து போகவேண்டும். இவ்வாறு மூன்று, நான்று மாதங்களுக்கோர் முறைதான் படுக்கையண்டை வரவேண்டு மென்றால் எந்த வாலிபன்தான் சலிப்படைய மாட்டான். மீறி ஏதேனும் ஹிம்சித்தாலோ, திரேகத் தைக் கெடுத்து விடுவதாகக் கூக்குரல்; பின்னர் தாய் வீட்டிற்கு ஓடிப்போய் விடுகிறாள். திரேக அவஸ்தையை அடக்கி அடக்கிப் பொறுக்கமுடியாத என் நண்பன் ஓர் இருபது வயதுள்ள ஏழை விதவைப் பெண்ணை சமையற்காரி யாய் வைத்துக்கொண்டிருக்கிறான். இதனால் அவன் மனை விக்கும் அவனுக்கும் சண்டை. சமையற்காரியாக ஓர் கிழவி யைத்தான் வைத்துக்கொள்ள வேண்டுமென்கிறாள். இவன் அதற்கு "கிழவியிடம் சுருசுருப்பில்லை: வெகு நிதானம். பரிசுத்தமும் அழகும் வாய்ந்த ஏழைப்பெண் பரிமாறுவது மனம் களிப்புடன் ஏற்றுக்கொள்ளுகிறது. சொந்த பாட்டி யானாலும் இந்த நாகரீக உலகில் அவளிட கை சாதத்தை மனமொப்பி சாப்பிட முடியாது" என்று என் நண்பன் சொன்னாலும் அவன் மனைவி கேட்பதில்லை. வீட்டு சமை யற்காரி வாலிபப் பெண்ணாய்த்தான் இருக்கவேண்டுமென் கிறான் என் நண்பன்; அப்படிக்கல்ல, கிழவியாய்த்தான் இருக்கவேண்டும். ஏனென்றால் அனுபவசாலியான கிழவி தான் நல்ல ருசியுடன் பக்குவமாய் சமைப்பாள் என்கிறாள் அவன் மனைவி. இதுவே நாள்தோறும் பெரிய சண்டை. இவர் கள் இருவர் பேசுவதிலும் மர்மமான காரணம் ஒவ்வொன்று உண்டு. இவ்வாறே கௌரவத்தையும்அந்தஸ்தையும் உத் தேசித்தோ, பணத்தை உத்தேசித்தோ "நிழல்மாடு" என் றழைக்கத்தகுந்த பெரிய வீட்டுப் பெண்களை மணம் புரிந்து கொண்ட எத்தனையோ வாலிபர்கள் பலவகை அவதிப்படுகி றார்கள்; வேலைக்காரிகளுக்கும், டாக்டர்களுக்கும் எண்ணி எண்ணிக் கொடுக்கும் அவதி ஓர் புறமென்றால் சாதாரண

சிற்றின்பத்தையும் அனுபவித்துத் திருப்தி யடையவும் சாத்தியப்படாமல், சாதாரண தன் வீட்டு குப்பைக்காரி யையே சரிப்படுத்திக்கொள்வதும், தாசிகளிடம் சென்று உடம்பைக் கெடுத்துக்கொண்டு திரவியநாசம் செய்வதும் சகஜமாய் விடுகிறது.

பெரிய வீட்டுப்பெண்கள் என்றால் எல்லோரும் அப் படிக்கல்ல. நல்ல காற்றோட்டம், சூரிய வெப்பம், திரேகத்தை வளைத்து வேலைசெய்தல், விளையாட்டுகள் இவற்றில் ஈடு பட்ட பெண்கள் எல்லோரும் நல்ல ஆரோக்யத்துடன் விளங்கி தானும் இன்ப மனுபவித்து, தன் கணவனுக்கும் இன்பமளித்து திடகாத்திரமுள்ள குழந்தைகளைப்பெற்று விளங்குகிறார்கள். யாதொரு வேலையையும் செய்துவைத்துப் பழகாமல், எப்போதும் சோபாவில் படுப்பதும், நன்றாக உண்பதும் உறங்குவதும், சோம்பலுடன் உட்கார்ந்த இடத் திலேயே ஊர்பட்ட அரட்டையடித்துப் பழகிய பெரிய வீட்டுப் பெண்களின்கதி மேற்குறித்த கதிதான்.

ஆகையால் திரேக ஆரோக்யத்திற்கும் உடல் வலிமைக் கும் நல்ல காற்றோட்டம், நல்ல சூரியவெப்பம், சோம்பல் தெரி யாமல் வேலைகள் செய்வது இவை மூன்றும் அத்யாவசியம் என்பதை அனைவரும் ஒப்புக்கொள்ளவேண்டும். இந்த மூன்று அம்சங்களையும் நிர்வாண சங்கங்கள் எவ்வாறு அடிப் படையாகக் கொண்டிருக்கின்றன வென்பதைக் கவனிப் போம்.

அத்தியாயம் 5.

ஸ்நானத்தின் அவசியம்

நம் திரேகத்திலுள்ள ஒவ்வோர் அவயவமும் ஒவ்வோர் முக்யமான வேலையைச் செய்கிறது. இதுதான் முக்யம்; அது முக்யமல்ல என்னும் கேள்வியே கிடையாது. இது இல்லாவிட்டால் சமாளித்துக் கொள்ளலாம் என்னும் பேச்சே கிடையாது. ஸ்ரீ பகவான் ஒவ்வொருவர் பூர்வ ஜென்ம புண்யத்திற்குத் தகுந்தாற்போல் ஒவ்வொருவர் வாழ்வின் அம்சங்களை அளந்து வைத்திருப்பதைப் போலவே, நாம் உலகில் சுகவாழ்வு வாழ்வதற்கு வேண்டியதற்கு சாதகமாக நம் திரேகத்திலுள்ள உருப்புக்களை தீர ஆலோசித்து ஒன்று இரண்டு என்று எண்ணி எண்ணியே வைத்திருக்கிறார். எதுதான் அவசியமல்ல? நரம்புள், தசைகள், எலும்புகள், நகங்கள், ரத்தம் இவைகள் ஒவ்வொன்றிலும் பற்பல வகைகள்; தோல், கண், காது, மூக்கு முதலிய உருப்புகள் இவைகளின் அமைப்புகள். இவைகள் ஒவ்வொன்றும் செய்யும் வெவ்வேறு வேலைகள்; இவற்றைக் குறித்து நன்கு ஆராய்ச்சி செய்து நினைத்து நினைத்துப் பார்த்தால் ஸ்ரீ பகவானிட சிருஷ்டியின் அருமையும் பெருமையும் அற்புதமும் எவனையும் பிரமிக்கச் செய்யும்.

நாம் உண்ணும் உணவினால் மட்டும் நம் திரேகத்திற்கு வலிமையில்லை. மலஜலம் இரண்டுக்குத் தவிர மற்றபடி ஒருவனை இடம் விட்டுப் பெயர்க்காமல் நன்றாக ஆகாரம் கொடுத்துக் கொழுக்கவை; அவன் எதற்கும் உபயோகமற்ற

சோம்பேறியாய், திரேக உறமில்லாதவனாய், தொந்தி பெருத்துப்போய் விடுவான். நல்ல உணவு திரேகத்திற்கு எவ்வளவு முக்யமோ அதைவிடப் பன்மடங்கு நல்ல காற்றோட்டமும், சூரிய வெப்பமும் அத்யாவசியம். உண்ணும் ஆகாரத்தை வயிற்றிலுள்ள குடல்கள் சத்துள்ள வஸ்துவால் ரத்தம் சேகரித்துக்கொண்டு, சக்கை வஸ்துவைத் தள்ளி விடுகிறதோ அதேபோல் நம் திரேகத்தின்மேல் படர்ந்துள்ள தோலும் திரேகத்தில் ஓடும் கெட்ட நீரை வெளிப்படுத்தி, நல்ல காற்றையும், சூரிய வெப்பத்திலுள்ள காந்த சக்தியையும் சிறுசிறு துவாரங்கள் மூலம் திரேகத்துள் சேர்த்துக் கொள்ளுகிறது. ஆகையால் நரம்புகளையும், சதையையும், ரத்தத்தையும் கவசத்தைப்போல் மூடிக்கொண்டு பாதுகாத்துவரும் தோலானது துர்நீரை வெளிப்படுத்தி திரேக ஆரோக்யத்திற்கு அத்யாவசியமான வெளிச்சத்தையும், காற்றையும் உட்கொண்டு வெகு வெகு முக்யமான வேலையைச் செய்கிறது. இதை நாம் ஊன்றிக் கவனிக்கவேண்டும்.

கஷ்டப்பட்டு விளையாடும்போதும், உடம்பைச் சுருக்காமல் வேலைசெய்யும்போதும் நம் திரேகத்திலுள்ள துர்நீர் அனைத்தும் தோலின்மேலுள்ள சிறு சிறு துவாரங்கள் மூலமாக வியர்வையாக வெளிப்படுகிறது. இதை உத்தேசித்தே எப்போதும் திரேகத்தை அபரிமிதமான ஆடைகளால் மூடி மூடி வைப்பது திரேகத்திற்குக் கேடு விளைவிக்கும். எவ்வளவுக்கெவ்வளவு நாம் வேலைசெய்து வியர்வையின் மூலம் திரேகத்திலுள்ள துர்நீரை வெளிப்படுத்திக் கொள்ளுகிறோமோ அவ்வளவுக்கவ்வளவு தசைகள் வளர்வதற்கு சௌகரியம் அளித்தவர்களாவோம். தோலின்மேலுள்ள துவாரங்களின் வழியாய் நல்லகாற்று திரேகத்துள் புகும்; சூரிய வெளிச்சத்திலுள்ள காந்த சக்தியும் திரேகத்தில் பரவும்.

குறைந்தது 6-மாதத்திற்கு ஒருவனை சூரியவெளிச்சமும் நல்ல காற்றும் இல்லாத இருட்டறையில் தள்ளுவோம்; பின்னர் பார்ப்போம். அவன் திரேகத்தில் வலிமையிராது; உடம்பு கெட்டுக் குட்டிச்சுவராய்விடும். ஆகையால் நல்ல உணவு நமக்கு எவ்வளவு அத்யாவசியமோ அதைவிடப் பன்மடங்கு காற்று, வெளிச்சம் இவையிரண்டும் அத்யா வசியம்.

தோலின்மேலுள்ள சிறு சிறு துவாரங்களை பூதக்கண்ணாடியைக் கொண்டுதான் பார்க்கக்கூடும்: அவ்வளவு ரொம்பவும் சிறியவை. நமக்குத்தெரிந்தும் தெரியாமலும் வெளிப்படும் வியர்வையால் அழுக்குண்டாகி இந்த சிறு சிறு துவாரங்கள் மூடிக்கொள்ளும். துவாரங்கள் மூடிக்கொண்டால் அதனதன் வேலையை அவைகள் செய்யத் தடைப்பட்டுவிடும். ஒரேஒரு நாள் தோலின்மேலுள்ள துவாரங்கள் தங்கள் வேலையைச் செய்யத் தடுக்கப்படுமாகில், திரேகத்தில் சூரிய வெப்ப காந்த சக்தியில்லாமல் சோம்பல் உண்டாகும்; சுருசுருப்பு இல்லை. திரேகத்துள் நல்ல காற்று புகாமல் உடம்பிலுள்ள ஒவ்வோர் பூட்டிலும் நோவு உண்டாகும். பல நாள் கழிந்தால் உடம்பு கெடும். வியாதிகள் உற்பத்தியாகும். இதைக் கவனித்தே, திரேக ஆரோக்யத்தினிமித்தம் தோலின் மேலுள்ள சிறுசிறு துவாரங்கள் அவற்றின் வேலையைச் செய்ய சௌகரியமளிக்க வேண்டியே, கூழானும் குளித்துக்குடி யென்று நம் முன்னோர்கள் எழுதி வைத்தார்கள். தினந்தோறும் குளித்தே தீரவேண்டு மென்னும் விதி யேற்பட்டது இதற்காகவே.

சௌகரியமுள்ளவர்கள் திரேக ஆரோக்யத்தைக் கவனித்து காலை மாலை இரு வேளைகளிலும் ஸ்நானம் செய்வது மேன்மை. இவ்வாறு தினந்தோறும் இரு வேளைகளிலும் ஸ்நானம் செய்வதை பழக்கமாகக் கொண்டவர்கள் அநேகர் இருக்

கிறுர்கள். உண்மையாகவே ஸ்நானம் செய்யாதவனுக்கு சோம்பல் அதிகம்; அவன் முகத்தில் மூதேவி தாண்டவ மாடுவாள்; ஸ்ரீ பகவானும் மனமொப்பி அவன் மனதில் கோவில் கொள்ளமாட்டான்; அக்கம் பக்கத்தான் அவன் உடன் இருந்து பேசவும் விரும்பமாட்டான். திரேகத்தை பரிசுத்த மாக்கிக்கொண்டு, மதச்சின்னம் ஒன்றுண்டாகில் (கிறிஸ்தவர்களுக்கு இல்லை) அதை நெற்றியில் பூசி, ஸ்ரீ பகவானை கை கூப்பி அனுதினமும் தொழாதவன் மாந்தருள் பதருவான். திரேகத்திற்கும் ஆரோக்யம் வேண்டுமாகில், கலைமடந்தையும் திருமடந்தையும் அருளளிக்க வேண்டுமாகில், நினைத்த காரியம் வெற்றிபெற வேண்டுமாகில், காலையிலெழுந்து வெளிக்குப்போய் வந்து, பல் துலக்கி, ஸ்நானம் செய்து, நெற்றியில் மதச்சின்ன மணிந்து ஸ்ரீ பகவானுக்கு ஒரு கும்பிடு மனமாறப் போட்டால் போதும். இவ்வாறு பத்தே பத்து நாள் செய்துபார்; இந்தப் பத்து நாட்களுக்குள்ளாகவே திரேக ஆரோக்யம் என்ன? மனதுள் ஒரு குதூகலம் என்ன? ஸ்ரீ பகவானிட அருள் என்ன எல்லாம் வந்துவிடும். ஸ்நானமும், பூஜையும் 6-மணி அடிப்பதற்குள் முடித்துக் கொள்வது மகாமேன்மை. விடியற்காலை 5-மணிக்குத்தான் நிசப்தம். ஸ்ரீ பகவானை நினைக்க இதுவே ஏற்றசமயம். நாம் ஸ்நானம் செய்வதும், பகவானை தியானம் செய்வதும் வேறெவர்க்கும் தெரிய வேண்டியதில்லை. பலர் அறிந்து மெச்சவேண்டி பகட்டிற்காகச் செய்வது ஸ்ரீ பகவானுக்கு ஏற்ற பூஜையாகாது. "கடவுள் வணக்கம்" என்பது நமக்கும் கடவுளுக்கும் தெரியவேண்டியதுதான். பலர் பார்த்து நம்மை மெச்சிக்கொள்ள வேண்டுமென்று நாம் ஆடம்பரமாகச்செய்யும் பூஜையை ஸ்ரீ பகவான் மெச்சிக்கொள்ளமாட்டார். ஆகையால் நிசப்தமான பிராதக் காலத்தில், மற்றவர்கள் எழுந்திருக்கு முன்னமேயே ஸ்நா

னம் செய்து பகவானை தியானித்துவிட்டு 5-45 மணிக்கே வெளித்திண்ணையில் உட்காரும் முகத்தையும் பார்; காலை 7-மணி வரையில் தூங்கிவிட்டு, எழுந்ததும் அறைகுறையாக அவசரத்தில் வாய் கொப்பளித்து காபி குடிக்கும் முகத்தையும் பார். யார் முகத்தில் சோம்பலின்றி சுரு சுருப்பு தென்படுகிறது? யார் முகத்தில் ஒரு புதிய "தேஜஸ்" தேஜோன்மயமாயிருக்கிறது? யார் முகத்தில் ஸ்ரீ பகவான் தாண்டவமாடுகிருர்? யாருக்கு எடுத்த காரியங்களில் ஜெயம் கிடைக்கும். உற்றுப் பார்ப்பவர்கள் அறிந்துகொள்ளலாம்.

திரேக ஆரோக்யத்தினிமித்தம் தினந்தோறும் குளிக்க வேண்டும் என்றிருந்தால் நம்மனோர் அசட்டை செய்துவிடுவார்கள் என்று நினைத்தே, நாள்தோறும் ஸ்நானம் செய்வது மதக்கட்டளை என்று எழுதினர்கள் நம் நாட்டு தீர்க்க தரிசிகள். ஏனெனில் நம் நாடு உலக சமுதாயங்கள் எல்லாவற்றிலும் மிகப் புராதன நாகரீகம் பெற்றது; கலை வளர்ச்சி அமையப் பெற்றது; உலகை ஊக்குவிக்கும் வேதாந்த வுண்மைகளை அடையப்பெற்றது. However bitter a pill may be, it may easily administered by giving it a sacharine coat of Religion. "எவ்வளவு கடுமையான விதியாயினும், அது மதக்கட்டளை என்று சொன்ன மாத்திரத்தில் அதை உடனே ஒப்புக்கொண்டு அனுபவம் செய்து கொள்வான்" என்பது பாரத மக்களுக்கே பொருந்தும். ஆண்டவன் கோயிலாகக் கொண்டுள்ள திரேகத்தை பரிசுத்தமாகவும், ஆரோக்யமாகவும் வைத்துக்கொள்ள வேண்டி நாள்தோறும் குளிப்பதை மதக்கட்டளையாகச் செய்த நம் நாட்டுப் பெரியார்களின் தீர்க்கத்தரிசினம்தான் என்னே!

இனி, தோலின்மேலுள்ள துவாரங்கள் சரிவர வேலை செய்யவேண்டும்: அதாவது, திரேகம் ஆரோக்யமாயிருக்க

வேண்டின் இந்த துவாரங்களின் வழியாக துர்நீர் வெளியாதல்; சூரிய வெப்ப சக்தியும், நல்லகாற்றும் திரேகத்துள் புகுதல் இவை மூன்றும் வெகுவெகு முக்யம் என்பதை ஒப்புக்கொண்டோம். இந்த மூன்று அம்சங்களுக்கும் மேல் நாட்டு நிர்வாண சங்கங்கள் எவ்வெவ்வகையில் சௌகரியமளிக்கின்றன வென்பதைக் கவனிப்போம்.

உண்பதற்கும், உறங்குவதற்கும், ஆனந்த மனுபவிப்பதற்கும் ஓர் அளவுண்டு; அதைப்போலவே நல்ல காற்று, சூரிய வெப்பம் இவற்றை அனுபவிப்பதற்கும் ஓர் கணக்குண்டு. அதிகமாக வெய்யலில் அலைந்தால் உடல் சிவந்து கருத்துப்போகும்; அதிகக் காற்றில் அடிபட்டால் சீதோஷ்ணம் கண்டுவிடும். நிர்வாண சங்கங்களில் சேரும் ஆண், பெண் மக்களுக்கு அவரவர் உடல் நிலைமைக்கும், தேவைக்கும் தகுந்தாற்போல் வெப்பம் அனுபவிக்கவும், காற்று உட்கொள்ளவும் தேர்ச்சிபெற்ற டைரக்டர் நிர்ணயிப்பார். அதன்படியே ஒவ்வொருவரும் நடந்து கொள்ளவேண்டும். சூரிய வெப்பத்தில் ultra violet rays என்னும் சக்தியிருக்கிறது. திரேக உருப்புகள் எல்லாவற்றிற்கும் உறமளிக்கும் அபூர்வ சக்தி இதற்குண்டு. காலையிலும், மாலையிலும், கோடைகாலத்திலும், மாரிகாலத்தில் சூரிய உஷ்ணத்தில் ultra violet கிரணங்கள் உண்டு. இதை அளவறிந்து அனுபவித்தல் ஆரோக்ய விதி. இந்த கிரணங்கள் திரேகத்தில் புகாவண்ணம் எப்போதும் ஆடைகளால் மூடிக்கொண்டால் திரேகம் எவ்வாறுதான் இந்த கிரணங்களை அனுபவித்துப் பயனடைவது?

அத்தியாயம் 6.

மர்மஸ்தானங்கள்
கேவலமானவையல்ல

திரேகாரோக்யத்திற்கு நல்ல உணவு எவ்வளவு முக்யமோ அதைவிடப் பன்மடங்கு சூரிய உஷ்ணமும், நல்ல காற்றும் அவசியம் என்பதைத் தெரிந்துகொண்டோம். காசநோய், எலும்புருக்கி முதலிய ரோகங்களுக்கு வியாதியஸ்தன் உடம்பில் நல்ல உஷ்ணத்தை ஊட்டுவிக்க ஓர் விளக்கு இப்போதும் நமது ஆஸ்பத்திரிகளில் வைக்கப்பட்டிருக்கிறது. இந்த விளக்கின் மூலம் வியாதிக்குத் தகுந்தாற்போல் எவ்வளவு உஷ்ணம் தேவையோ அவ்வளவு உஷ்ணத்தை வியாதியஸ்தன் திரேகத்தில் நாள்தோறும் செலுத்தி வந்து வியாதியைப் போக்கடிக்கிறார்கள். செயற்கை வஸ்துவாகிய இந்த விளக்கின் மூலம் உஷ்ணத்தை திரேகத்தில் செலுத்திக் கொள்வதற்குப் பதிலாக பகவான் இயற்கையில் நமக்களித்துள்ள சூரிய வெப்பத்தையே உபயோகித்துக்கொண்டு ஆரோக்யத்தைப் பெறலாமல்லவா?

திரேகத்தின் மேலுள்ள தோல் எவ்வளவுக் கெவ்வளவு சூரிய வெப்பத்திலிருக்கிறதோ அவ்வளவுக் கவ்வளவு தோலின் மேலுள்ள துவாரங்கள் தத்தம் வேலைகளைச் சரிவரச் செய்ய சாத்தியப்படுகிறது. இது திரேகாரோக்யத்திற்குப் பெரிதும் உதவுகிறது. திரேகத்தின் மேலுள்ள தோலின் ஒவ்வோர் அணுவும் சூரிய வெப்பத்தின் வாடையி

யிருக்கவேண்டும் என்பது நிரேக நூல் சாஸ்திரிகள் துணிபு. மர்மஸ்தானங்களை மட்டும் மறைத்துவிட்டு மற்ற பாகங்களை மட்டும் சூரிய வெப்பத்திற்குக் காட்டக் கூடாதாவென்று கேட்கலாம். எப்போது ஒரு பொருளை மறைக்கிறோமோ அப்போதே அது ஒரு அசங்கியமான வஸ்து அல்லது அது ஒரு மர்மம் என்று பொருள்படும். கை, கால், வயிறு இவைகள் எவ்வாறு சாதாரணமான அவயவங்களோ அதேபோல் ஆண், பெண் மர்மஸ்தானங்களும் சர்வ சாதாரணமானவை களேயாகும். மற்ற அவயவங்களைவிட இந்த மர்மஸ்தானங் களில் மட்டும் ஏதோ பிரமாதம் இருக்கிறதென்று மூடி மூடி வைத்தால், அவ்வாறு மூடி மூடி மறைத்து வைப்பதனுலேயே எவ்வளவோ அனர்த்தங்கள் விளையும். எல்லா அவயவங்களைப் போலவே இவைகளும் சாதாரணமானவைகளேயென்று பட்டவர்த்தனமாய் வெட்டவெளிச்சமாய்விட்டால் அதைப் பற்றின அதிகமான யோசனையே இல்லாமற் போய்விடும். மேலும் சூரிய வெப்பம் மற்ற அவயவங்களின்மேற் படுவதை விட மர்மஸ்தானங்களின் பேரில் அவசியம் அதிகமாகப் பட வேண்டும். சூரிய வெப்ப ஆகர்ஷணத்திற்கு மர்மஸ்தானங்கள் வெகு முக்யம் என்பது கவனிக்கப்படவேண்டும். மேலும், உலக அபிவிருத்திக்கும், குடும்ப ஒற்றுமைக்கும், பகவானிட எண்ணத்தைப் பூர்த்தி செய்வதற்கும், மாந்தர்க்கு உலகத்தில் மேலானதோர் இன்பத்தை யளிப்பதற்கும் காரணபூதமா யிருக்கும் மர்மஸ்தானங்கள் அசங்கியமானவையல்ல; கேவல மானவையல்ல; அவற்றைப்பற்றி நாம் வெட்கப்படக்கூடிய வையுமல்ல. மேலானதோர் - உன்னதமான நோக்கத்தைப் பூர்த்திசெய்ய ஏற்பட்டவை. அவற்றை மரியாதையுடன்—சிரத்தையுடன்—கவனத்துடன் பாதுகாத்துப் பயன் பெற வேண்டு மென்பது கடவுளிட சட்டம். எல்லா அறங்களுக் கும் அடிப்படையாயுள்ளது இல்லறம்; இந்த இல்லறத்திற்கு

ஆக்கமளிக்கவே சிருஷ்டிக்கப்பட்டவை ஆண் பெண் மர்மஸ் தானங்கள்.

சூரிய வெப்பத்தையும், நல்ல காற்றையும் அனுபவிக்க வேண்டுமாயின் தனித்தனி நபர்கள் நிர்வாணமாகவே அவரவர்கள் வீட்டிலேயே ஏகாந்தமாக அனுபவிக்க சௌகரியம் செய்துகொள்ளலாமல்லவா? ஆம்: செய்து கொள்ளலாம். உதாரணமாக மேல் நாடுகளில் திரேகாப்யாசம் செய்ய உபாத்தியாயர் சொல்லிக்கொடுப்பதற்குப் பதிலாக கிராம போன் ரிகார்டுகள் இருக்கின்றன; கிராமபோன், அப்பியாசங்களை வரிசைகிரமமாக சொல்லிக்கொண்டு வருகிறது; அப்பியாசம் செய்கிறவன் இதைக்கேட்டுக்கொண்டே செய்து வரலாம். ஆனால் எந்தஒரு வித்தையும் தன்னந்தனியாய் சொல்லிக்கொள்வதிலோ, அப்யசிப்பதிலோ அவ்வளவு பலன் இல்லை. ஒரு கூட்டத்துள் கலந்து செய்தால் அதில் ஒரு குதூகுலம் உண்டு; உற்சாகம் உண்டு; எதுவும் சீக்கிரத்தில் கற்றுக்கொள்ள அபிலாஷை ஏற்படும். பிறரைப் பார்த்தாகிலும் நமக்கே அக்கரை பிறக்கும். பிறர் அடைந்துவரும் அபிவிருத்தியைப் பார்த்து ரோஷம் பிறந்து நாம் அதிகமாகக் கற்றுக் கொள்ள வேண்டுமென்னும் ஆசை பிறக்கும். ஆண்கள் வேறு, பெண்கள்வேறு என்று பாகுபாடுசெய்து தனித்தனியாய் நிர்வாண நன்மைகளை அனுபவிக்கலாகாதா? இதுவும் செய்யலாம். மர்மஸ்தானங்களில் எந்தவித வெட்கிக்கத்தகுந்த விஷயமும் இல்லை. இதனால் நம் மனம் சிதறுவதுமில்லை யென்பதை நாம் முன்னமே எப்போது ஒப்புக்கொண்டோமோ ஆண் பெண் கலந்து நிர்வாண நன்மைகளை அனுபவிப்பதில் என்ன ஆக்ஷேபணை?

இயற்கையின் எழிலைக் கண்குளிரக் காணவேண்டுமா? ஆண்டவனிட அற்புத சிருஷ்டித் திறனைக் காணவேண்டுமா? எனின் பக்குவமடைந்த கன்னிப்பெண்—உருண்டு திரண்ட

அவயவங்களுடன்—நல்ல ஆரோக்யத்தையும் திடகாத்திரத்தையும் அனுபவிக்கும் பெண் மானே பிறந்த மேனியுடன் பரிபூர்ண நிர்வாணமாய்க் காணவேண்டும். நல்ல ஆரோக்யமும், தந்திக்கம்பி போன்ற நரம்புகளும், திரேக திடனும், இரும்பு போன்ற அவயவங்களும் உடைய ஆண் மகன் நிர்வாணமாய் நிற்பதைக் காணவேண்டும். ஆரோக்ய அபிவிருத்தியின் பேரிலேயே முழு கவனத்தையும் செலுத்தினால் வேறு கெட்ட எண்ணங்கள் தென்படுவதேயில்லை. "மர்மம், மர்மம்" என்று மூடி மறைத்து வைப்பதை விட்டு மற்ற அவயவங்களை யோசனையின்றி வெளிக்குக் காட்டுவதைப்போல் மர்மஸ்தானங்களையும் மூடாமல் விட்டால் அதுவும் சாதாரணமென்றே நம் கண்களுக்குத் தோன்றும். இவ்வாறு ஆரோக்கியத்திற்காக பரிபூர்ண நிர்வாணத்தை யனுபவிப்பது சாதாரண வாழ்க்கை நடத்தும்போது தெருவில் போகச் சொல்லவில்லை. ஆரோக்யத்திற்காகவே ஏற்பட்டு, இதன் உன்னதமான நோக்கங்களை ஒப்புக்கொண்ட ஆண், பெண், சிறுவர் கூட்டங் கூடியிருக்கும் நிர்வாண சங்கங்களில்தான் நிர்வாணக் கோலம்; சங்கங்களை விட்டு வெளிக் கிளம்பும்போது ஆடைகளுடன் செல்ல வேண்டியதே.

சங்கங்களைத் தவிர மேல்கண்ட அனுகூலங்களை அனுபவிப்பதற்கு ஆண் பெண் கலந்த 4-பேர், 5-பேர் சேர்ந்த சிறு கூட்டத்தார் விடுமுறையின்பேரில் கிராமாந்தரங்களுக்குச் செல்லலாம்; அங்கே ஜன நடமாட்டமில்லாததும், இயற்கை வனப்பு மிக்கதும், மேல்கண்ட அப்பியாசங்களுக்கு சௌகரியங்கள் அளிக்கக்கூடியதுமான ஏகாந்தமானதோர் இடத்தில் பரிபூர்ண நிர்வாண வாழ்வு குறித்த காலத்திற்கு நடத்திவிட்டு மறுபடியும் திரும்பி வரலாம். இவ்வாறு சிறு சிறு கூட்டத்தார் இங்கிலாந்து, பிரான்சு முதலிய

மேல் நாடுகளில் ஆரோக்யத்தைக் கருதி யனுபவிக்கிறார்கள். ஒருவன் விலையுயர்ந்த ஆடைகளை அணிந்திருந்தால் அவன் பெருமையாய் விளங்குகிறான். அவன் நல்ல ஆரோக்யசாலியாயிருக்கிறானா? பலசாலியா? என்பது ஒன்றும் தெரிவதில்லை. நிர்வாண சங்கத்தில் அப்படிக்கல்ல. மனிதனோ, ஸ்திரீயோ யாவராயினும் அவர்களிட உண்மையான உடல் நிலை தெளிவாகத் தெரிந்துவிடும். நன்றாக ஆடைகளணிந்து மீசைகள் முறுக்கும் ஆடவர்கள் ஒன்றுக்கும் உதவாதவர்களாயிருக்கலாம். மேலுக்கு மினுக்கும் ஸ்திரீயும் ஆயிரத்தெட்டு நோய்களால் பீடிக்கப்பட்டு, ஆடைகளை சற்று விலக்கி உண்மை உடலைப்பார்க்கவும் வாந்தி வரும் நிலைமையிலும் இருக்கலாம். இவ்வாறு மேலுக்கு மினுக்கி ஏமாற்றுவது நிர்வாண சங்கத்தில் முடியாது. ஒவ்வொருவர் உண்மை நிலைமை நன்றாகத் தெரிந்துவிடுவதன்னியில், அவரவர்கள் தங்கள் உடல் நிலையை அபிவிருத்தி செய்துகொள்ள அக்கரை எடுத்துக் கொள்வார்கள்.

இச் சங்கங்களில் உடல் அறிவு சாஸ்திரத்தில் பாண்டித்யம் பெற்ற ஆசிரியர் (டைரக்டர்) ஒருவர் இருப்பார். இச் சங்கத்தில் பயிற்சி பெற வரும் ஆண், பெண், சிறுவர் ஒவ்வொருவர் சக்திக்கும் உடல் நிலைமைக்கும் தகுந்தவாறு படிப்படியாய் ஆரோக்ய விதிகளை யனுசரித்து பயிற்சி செய்விப்பார். முன் அத்தியாயங்களில் நாம் கூறிய வண்ணம் திரேகாரோக்யமே இச் சங்கங்களின் நோக்கம்—சங்கத்தில் சேரும் ஆண், பெண், சிறுவர் சகலரும் இதே நோக்கத்தைத் தம் ஆவியுள் நன்றாக பதித்துக்கொள்ள வேண்டும். வேறு ஏதாவது கெட்ட எண்ணங் கொண்டு துன்மார்க்கம் செய்ய எவராகிலும் முற்பட்டால் உடனே அவர்கள் வெளியேற்றப்படுவார்கள். ஆண், பெண், இருபாலுக்கும் இயற்கையாக மர்மஸ்தானங்களில் வித்தியாசமுண்டு யென்னும் ஞானம்

சிறுவர் சிறுமிகளுக்கு வந்தவுடன் அதைக் கண்ணாரக் காண வேண்டும் என்னும் அபிலாஷை சகஜமாக ஏற்படுகிறது. பெரியோர்கள் இதைத் தடுக்கிறார்கள் அல்லது நிர்வாண பிம்பம் இவர்கள் கண்ணுக்குத் தென்படுவதில்லை. இதன் பயனாக சிறுவர், சிறுமியர் மனதில் ஓர்வித சஞ்சலம்; பார்க்க முடியாததைப் பார்க்கவேண்டு மென்னும் ஆசை தோன்றுகிறது. ஆடவர், பெண்டீர் குளிக்கும்போது எட்டிப் பார்ப்பதும், இளவயதிலேயே தீய வழக்கங்களில் ஈடுபடுவதும் வழக்கமாய் விடுகிறது. நிர்வாண சங்கங்களில் கலந்துகொள்ளும் சிறுவர், சிறுமியருக்கு இந்த சந்தேகமும் சஞ்சலமும் தீர்ந்து விடுகிறது.

அத்தியாயம் 7.

மேல் நாட்டுப் பெண்ணும் கீழ் நாட்டுப் பெண்ணும்

நமது திரேகத்தின் ஒவ்வோர் அவயவத்தின் அபிவிருத்திக்கும் ஒவ்வோர் வகை அப்பியாசம் இருக்கிறது. மேல் நாட்டினர் திரேகதத்துவ சாஸ்திரத்தை நன்கறிந்து திரேகத்தின் உருப்புகளின் அபிவிருத்தியைக் கோரி யுழைப்பதிலும் பணச்செலவு செய்வதிலும் நம்மைவிட சமர்த்தர். உதாரணமாக அசங்கியமாகத் தோன்றும் மூக்கை ஆபரேஷன் செய்து தமக்கு வேண்டிய வகையில் அந்த அவயவத்தைத் திருத்திக்

கொள்ளுகிறார்கள். இது நமக்கு கேவலமாகத் தோன்றும்; அல்லது மூக்கு எப்படியிருந்தாலென்ன வென்று கேட்போம். ஆனால் மூக்கின் லக்ஷணத்தைப் பொறுத்தே அவர்களுக்கு அதிர்ஷ்டம் அமைந்துவிடும். விகாரமான மூக்கால் ஒரு பெண்ணினிட முகமே வசீகரமாகத் தோன்றாது. ஆகையால் இந்த அவயவத்தை எவ்வளவோ கஷ்டப்பட்டு, திரவியம் செலவு செய்து ஆபரேஷன் செய்துகொண்டு, மூக்கை சற்று திருத்தி அமைத்துவிட்டால் அதே பெண்ணை நாளைய தினம் ஒரு பெரிய சீமான் கலியாணம் செய்து கொள்வான். அல்லது இவளை ஒரு சினிமா டைரெக்டர் கூப்பிட்டு படங்களில் நடிக்கச் சொல்வான். அதன் பயனாக லக்ஷக் கணக்கில் இவள் சம்பாதித்துக் கொள்வாள். இதனால்தான் மேல் நாட்டுப் பெண்கள் தங்களை அழகுபடுத்திக்கொள்வதிலும், தம்மிட திரேகத்தின் ஒவ்வோர் அம்சத்தையும் திருத்திக் கொள்வதிலும் வெகு கவனம் செலுத்துகிறார்கள். இதற்கனுசரணையாகவே திரேகதத்துவ ஆராய்ச்சியாளரும் புதுப்புது நவீனங்களைக் கண்டு பிடிப்பதையே தொழிலாகக் கொண்டிருக்கிறார்கள்.

அடுப்பூதும் பெண்ணிற்குப் படிப்பெதற்கு என்று இடித்துப் பேசுவதும், பெண்ணாகப் பிறந்தவள் வீட்டு வாசற்படியைத் தாண்டலாகாதென்று முகத்தைச் சுளித்துப் பேசுவதும், சாதம் வடிக்கத்தெரிந்தால் போதும், லக்ஷணம் எதற்கு? தெருவில் நின்று ஆடப்போகிறாளா என்று தர்க்கமாடுவதும், பார்யா ரூபவதி சத்ரு என்று பழமொழி சொல்வதும் நம் நாட்டில் சகஜமாயிருக்கிறது. ஆனால் மேல் நாட்டுப் பெண்மணிகளோ ஆடவர்களுக்கேற்பட்ட சுகம் துக்கம், நல்லது கெட்டது, கௌரவம் அகௌரவம், கடமை பொறுப்பு எல்லாவற்றிலும் சமபங்கு எடுத்துக் கொள்ள லாயக்குள்ளவர்களாயிருக்க வேண்டும். இவ்வளவு பொறுப்பு

களையும் திறமையுடன் நிர்வகிக்கக் கற்றுக்கொள்ளுகிறார்கள். நடையுடைபாவனைகளில் தன்னை ஆடவன் விரும்புமாறு மேல்நாட்டுப்பெண் கற்றுக்கொள்வதல்லாமல், தன் அழகையும் அவயவலக்ஷணத்தையும் பார்த்து மோகிக்குமாறு செய்து கொள்வதிலும் அவள் தன்னாலியன்றவரையில் பாடுபடுவாள். கலியாணமாகும் வரையில்தான் ஒருபெண் நன்றாகத் தன்னை அலங்கரித்துக் கொள்ளவேண்டும்; ஆடவன் தொட்டுத் தாலிகட்டியவுடன் நாதாரியாய்க் கிடந்தாலும் பாதகமில்லை. கொண்டகணவன் விட்டுவிடப்போகிறானா யென்று நம்முள் சிலர் நினைப்பதுண்டு. பெண்ஜாதி அலங்கரித்துக்கொள் வதை விரும்பாத நண்பர்களும் இருக்கிறார்கள். மேல் நாடுகளில் அப்படிக்கல்ல. காலமுற்றும் கணவன் தன்னையே தொழுதிட வேண்டுமென்று மேல்நாட்டுப் பெண்மணி நினைக்கிறாள். விவாகரத்து என்னும் பீதி மேல் நாடுகளில் பிரபலமாக யிருக்கிறதே அதற்காகத்தான் அப்பெண்கள் அலங்கரித்துக் கொள்கிறார்கள் என்று சொல்லலாம். அந்த விஷயம் ஒரு புறமிருக்க, தாங்கள் வெகு லக்ஷணமாகத் தங்கள் கணவர் கண்களுக்குப் படவேண்டுமென்றும், இவ்வாறு தங்களை அலங்காரம் செய்து கொள்வதால் தங்களுக்கு ஒரு ஆனந்தமும், கணவனுக்கு ஒரு குதூகலமும் உண்டாக வேண்டுமென்றும் மேல்நாட்டுப் பெண்கள் உண்மையாகவே கருதி இந்த நோக்கத்திற்காகப் பெரிதும் உழைக்கிறார்கள் என்பதை நாம் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும்.

நம் நாட்டுப் பெண்மணிகள் நகைகளால் தங்களை அலங்கரித்துக்கொள்ளப் பேராவல் கொள்கிறார்கள். மனைவிக்கு எவ்வளவுக்கெவ்வளவு நகைப்பித்து ஏறுகிறதோ, அவ்வளவுக் கவ்வளவு புருஷனுக்கு மனச்சாந்தியில்லை; கடன்படாமல் கௌரவமாக வாழ்ந்தவன், கடன்பட்டு, பிறர்க்குத் தலை வணங்கி, மானமிழந்து மதிகெட்டு, எல்லார்க்குங் கள்ளனாய்

வாழவேண்டிய நிலைமை ஏற்பட்டு விடுகிறது. ஏன்? பெண்ஜாதியின் நகைப்பித்து. கடன் பட்டு, அவதிப்பட்டுப் போட்ட நகை, கடனுளி வாரண்டு பிறப்பிக்கும் போதும் உதவுவதில்லை. இதேபோல் மேல்நாட்டு பெண்மணிகளின் அலங்காரப்பித்து. கண், மூக்கு, வாய், உதடு, தலைமயிர், கன்னங்கள் இவைகளை ரம்யப்படுத்த தனித்தனி அபூர்வங்கள். கன்னங்கள் செவேலென்று தென்பட பௌடர் உண்டு; உதடு சிவப்பு வர்ணத்துடன் ஜ்வலிக்க Lip stick என்று மருந்துக் குச்சி. இதை உதடுகளின் மேல் பூசினுல், நாள் முழுதும் சிவப்பாயிருக்கும். எச்சல் பட்டாலும் இது மாறுவதில்லை. தலைமயிரை அலங்காரமாகக் கத்தரித்துக் கொள்ளுகிருர்கள். சுருண்ட மயிர்கள் பெண்களுக்கு ஓர் தனி அலங்காரம் அளிப்பதல்லவா? சிலருக்கு இயற்கையாகவே தலைமயிர் சுருண்டிருக்கும். அப்படிக் கில்லாதவர்கள், தங்கள் தலைமயிரை சுருள் சுருளாகச் செய்ய பவுன் பவுன்களாகக் கொடுத்து செயற்கைக் கருவிகள் மூலம் சுருண்ட மயிர் அடைகிருர்கள். தலையில் தவிற, மற்றெந்த பாகத்திலும் ஒரே ஒரு மயிர்கூட பெண்களுக்குக் கூடாது; ஆகையால் தங்கள் திரேகத்தைப் பரிசுத்தப் படுத்திக்கொள்ள விலையுயர்ந்த மருந்துகள் (கிரீம்) திராவகங்கள் இவற்றை உபயோகப்படுத்தி ரம்யப்படுத்திக் கொள்கிருர்கள். இவைகளை அனுவசியம் என்று நாம் நினைக்கலாம். ஆனுல் ஆடவர்கள் தங்களை விரும்பும் வண்ணம் வெகு சாமர்த்தியமாக மேல்நாட்டுப் பெண்கள் அலங்கரித்துக் கொள்ளுகிருர்கள்; சுத்தப்படுத்திக் கொள்ளுகிருர்கள்.

திரேகத்தை ஆரோக்யமாக வைத்துக் கொண்டிருந்தால் தான் இல்லற இன்பம் மனச் சந்துஷ்டியுடன் அனுபவிக்க முடியும்: கணவனுக்கும் கரைகாணுத இன்பமளித்துத் தானும் இன்பமளிக்கலாம் என்பதை ஒப்புக்கொண்ட மேல்

நாட்டுப் பெண்மணி, நிர்வாண சங்கத்தால் சிறந்த ஆரோக்யம் அடையலாம் என்பதை நிரூபித்தால் உடனே நிர்வாணமாக சங்கத்துள் பிரவேசிக்கப் பின்வாங்கமாட்டாள். ஆண் பெண், கணவன் மனைவி ஆரோக்யசாலிகளாகில், திடகாத்திரமுள்ள சந்ததிகளைப் பெறலாம்; நாட்டிற்கும் நன்மையுண்டு யென்பதை அறிந்த மேல்நாட்டினர், நாட்டின் க்ஷேமத்திற்காகவும், பிற்கால சந்ததிகளின் க்ஷேமத்திற்காகவும் நிர்வாண சங்கங்களை ஏற்படுத்திப் பயனடையப் பின்வாங்கவில்லை. பிறர் ஏளனம் செய்வார்களே! கேலி செய்வார்களே! நகைப்பார்களே! காட்டுமிராண்டித்தனம் என்று கண்டிப்பார்களே யென்னும் எண்ணமே இவர்களுக்குக் கிடையாது. தங்கள் நாட்டிலுள்ள மேதாவிகள் எதை ஆதரிக்கிறார்களோ அதை உடனே ஒப்புக்கொள்வான் மேல்நாட்டான்.

மேல்நாட்டுப் பெண்மணியும் தன் அவயவங்களை லக்ஷணமாக வைத்துக்கொள்ளவும் அதனால் புருஷனுக்கு தெவிட்டாத இன்பமளிக்கவும் பாடுபடுவாள். உதாரணமாக பல பெண்களுக்குப் பல வகையாக ஸ்தனங்கள் இருக்கும். சதை இளகி, தொங்கும் ஸ்தனங்கள் லக்ஷணமுள்ளவையாக மாட்டா: இவற்றால் இந்தப் பெண்களுக்கே லஜ்ஜையாக விருக்கும். தொங்கும் ஸ்தனங்களை புருஷர்களும் விரும்பமாட்டார்கள். ஆகையால் மேல்நாட்டுப் பெண்கள் தங்கள் ஸ்தனங்களைப் பருக்க வைத்தும், தொங்காமலுமிருக்கத் தங்களால் இயன்றளவு பாடுபடுவார்கள். தங்கக் கலசம்போல் தங்கள் ஸ்தனங்களிருக்கவேண்டி, மருந்துகளும் உட்கொள்வார்கள்; அப்பியாசங்களும் செய்வார்கள். இதற்காகத் தயாரிக்கப்பட்ட கருவிகளையும் உபயோகித்துப் பயனடைவார்கள். மேல்நாட்டுப் பத்திரிகைகளைப் பார்த்தால் ஸ்தனங்களைப் பருக்கவைக்கவும், இறுகவைக்கவும் எத்தனையோ புதுப்புது மருந்துகள் விளம்பரப்படுத்தப்

பட்டிருப்பதைக் காணலாம். இது நமக்குப் பிரமாதமாக வும், அல்லது நமக்கு அவசியமில்லாதவை போலவும் தோன்றலாம்; ஆனால் மேல் நாடுகளில் அப்படிக்கல்ல.

எலும்புந் தோலுமாயுள்ள பெண்ணை எவனும் விரும் பான்: சதைப் பிடிப்புள்ள பெண்ணே விரும்பப்படுவாள். நாளுக்கு நானூறு நோய் சொல்லும் மனைவியால் யாது பயன்? ஒரு நாளானுயினும் நல்ல ஆரோக்யமும் திடசாலி யாயுமுள்ள மனைவியால் அடையும் சிற்றின்பமே பேரின்ப மாகத் தோன்றும். லக்ஷணமுள்ள அவயவங்களுடன், இடை சிறுத்து, வயிறு ஆலிலைபோல் உடலையொட்டி, தங்கக் கலச ஸ்தனங்களுடன், செந்தாமரை வாயால் பேசி, காந்த சக்தி மிகுந்த கண்களால் ஆடவன் மனதை இழுக்கும் மோகினியை ஒரு நாள் அனுபவித்தாலும் போதும். இந்த நோக்கத்தைக் கொண்டே தங்களை ரம்யப்படுத்தி ஆடவருக் கும் இணையிலா இன்பமளித்து தாங்களும் சம்பூர்ணமாக ஆட வன் மனதைக் கொள்ளைகொள்ள வேண்டுமென்பதே மேல் நாட்டுப் பெண்மணியின் அபிலாஷை. இந்த அபிலாஷை யைப் பூர்த்தி செய்து வைப்பதாக மேதாவிகள் நிர்வாண சங்கங்களைக் காட்டும்போது, பெண்கள் மனப்பூர்வமாகக் கலந்து கொள்வதில் என்ன ஆச்சர்யம்?

அத்தியாயம் 8.

வைராக்யம் யாது?

வைராக்யமும், மன உறுதியும், ஒரே நோக்கமும், மன மொழி மெய்த் தூய்மையும் பெற்றோனே பெரியோன். கடவுள் பக்தி ஒரு துளியுண்டாகில் அது காந்தசக்தி போல் வேலை செய்யும். அது எவனிடம் இல்லையோ, அவன் எதை சாதிக்கவும் லாயக்கானவனாக மாட்டான். "வைராக்யம்" என்றால் உலகை வெறுப்பதல்ல; காட்டில் திரிவதல்ல; பிறரைப் பார்த்து ஏளனம் செய்வதல்ல; "நான்" எனும் அகங்காரப் பேயால் தலைவிரித்தாடுவதல்ல; உடல் முழுவதும் விபூதி பூசி, ருத்ராக்ஷம் கழுத்திலணிந்து, ஜப மாலை யேந்தி கொடுப்போரைப் போற்றி, கொடுக்க மறுப்போரைத் தூற்றித் திரியும் பேராசையல்ல; சாஸ்திரம் ஒன்று சொன்னால், அதை வேறாகத் திரித்துக் கூறியோ, அர்த்தத்தை அனர்த்தம் செய்தோ பேச்சுச் சண்டையிலிறங்கும் பாண்டித்யத் திறமையல்ல; வைராக்யமென்றால் ஒரே நோக்கத்தை மன மொழி மெய் சாக்ஷியாக ஆண்டவனுக்குப் பயந்துக் கடைபிடிப்பது. ஆளைப் பார்த்து வேளைக்குத் தகுந்தாற்போல் பேசுவோன் வைராக்யசாலியாகான்; ஒரு க்ஷணம் சிரிப்பது, மறு க்ஷணம் கோபிப்பது, அடுத்தாற்போல் மூலையிலுட்காருவது இவன் வைராக்யசாலியாகான்; க்ஷணப் பித்தனுக்கும், திடசித்த மில்லாதவனுக்கும் வைராக்யம் வெகு தூரம்; தனது கடமைகளையும், தனது பொறுப்புகளையும், தனது தவறுதல்களையும் உணர்ந்து கூசாமல் ஒப்புக்கொள்வோனே "வைராக்யம்"

இன்ன தேன்பதை அறிய முடியும். புஸ்தகத்தின் ஏடுகளை மட்டும் புரட்டுவோன் வேதாந்த வுண்மைகளை ஆவியுள் பதித்துக் கொள்ள முடியாது. வேதாந்தம் என்பது இயற்கையாகக் கிளம்பும் ஊற்று; இயற்கை ஊற்று வெளிப் பகட்டு காட்டாது. இன்ன இடத்தில் ஊற்று இருக்கிறதா இல்லையா வென்று அறியவேண்டுமாகில், வெகுவாகப் பாடு பட்டுத் தோண்டி பார்க்கவேண்டும். அதேபோல் ஒருவனி டம் வேதாந்த காந்த சக்தி பாய்கிறதா இல்லையா வென் பதை அறியவேண்டுமாகில் மேல் பகட்டை நம்பி ஏமாற முடியாது; வயதைப் பார்த்தோ, இருக்கும் இருப்பைப் பார்த்தோ, "இவனிடம் அபூர்வ சக்தி" யில்லை யென்று நிர்ணயிக்கவும் முடியாது, கூடயிருந்துப் பழகி ஒவ்வோர் நடையுடை பாவனையையும் கூர்மையாகக் கவனிக்க வேண் டும்; அப்போதுதான் அவனிடம் பரிமளிக்கும் சக்தி தோன்றும்.

கடவுளின் பேரில் பக்தி செலுத்துவதில் வைராக்யம் கொண்டால் போதும்: இதுவே சாதாரண கிருஹஸ்தனுக் குப் போதுமான அப்பியாசம். படத்திலிருக்கும் பகவானை கண்ணாடியையும் நாற்புறத்து சட்டத்தையும் விட்டு வெளியே எடுக்க வேண்டும்; திடமுள்ள மனதில் அவரை உட்கார வைக்கவேண்டும். சதா சஞ்சல புத்தியுள்ள மனதில் அவர் கோயில் கொள்ள மாட்டார்; "நான்" என்னும் அகம்பாவ முள்ள இடத்தில் ஒரு க்ஷணங்கூட காலடிவைக்கமாட்டார்; குரங்குபோல ஓடியாடும் மனதில் ஒரு க்ஷணத்திற்குமேல் தங்கமாட்டார். எது வரினும் கவலாத மனம்; எப்போதும் முக மலர்ச்சி; எதுவும் ஆண்டவன் ஆணையே என்னும் அம்சங்கள் எங்கெங்குண்டோ அங்கெல்லாம் பகவான் காக்ஷியளிப்பார்.

கடவுள் நினைப்பேயில்லாதவனுக்கு எதைக் கண்டாலும் பயம்; ஒரு பாம்பைக்கண்டால் பயம், பல்லியைப் பார்த்தால்

நடுக்கம் ; பூரான், எறும்பு, மாடு, ஆடு எதைக்கண்டாலும் ஓட்டம். ஒரு தம்பிடி போனால் அழுகை ; ஆயிரம் வந்தால் அளவு தெரியாமல் ஆனந்தம். ஒரு நாளின் பேரில் ஆயிரம் சந்தோஷங்கள், ஆயிரம் வருத்தங்கள், ஒரு லக்ஷம் கடுகடுப்பு, ஒரு கோடி எண்ணங்கள், பல கோடி துயர்கள். பச்சோந்தியும் இப்படியே. ஒரு க்ஷணத்திற்கு ஆயிரம் வர்ணங்கள், உடலின் ஒரு பாகத்தில் ஒரு வர்ணம் இருக்கும்போதே மற்ற பாகங்களில் பற்பல வர்ணங்கள். அப்போது பச்சோந்திக்கும் மனிதனுக்கும் வித்தியாசம் எங்கே? கடமையும் பொறுப்புமறியா மிருகத்திற்கும் மனிதனுக்கும் வித்தியாசம் எங்கே? பாம்பு வீட்டிற்குள்வந்து ஆர்பாட்டம் செய்கிறது. இதைக்கண்டு மனிதன் தடியெடுத்து வருகிறான். இவனைக்கண்டு பாம்பு சீறுகிறது. அவன் தடியெடுத்து அடிக்க வருகினானே யென்று பிறர் பேரில் தவறுதல் நினைக்கிறதே யொழிய "நம்மிடம் கொடிய விஷம் இருக்கிறது. அவன் சம்சாரம் செய்யு மிடத்தில் நாம் யமனைப்போல் வந்தது பிசகு" என்று பாம்பிற்குத் தெரிவதில்லை. கொடிய பாம்பிற்கும் மனிதனுக்கும் வித்தியாசம் இருக்கவேண்டும். அவனவன் தன்னிட போறுப்பு, கடமைகள், தவறுதல்கள் இம்மூன்றையும் கட்டாயம் உணரவேண்டும். இல்லையேல் மடத்தனமுள்ள - பகுத்தறிவில்லாத விலங்குகள், புழு பூச்சிகளின் அந்தஸ்திலுள்ள ஆவியே மனிதனிடம் காண்கிறதென்று சொல்லிவிடலாம். விலங்குகளின் ஆவிக்கும் மனிதன் ஆவிக்கும் மேற்குறித்த குணங்களில் வித்தியாசம் உண்டு ; அதுவே "தாரதம்யம்" என்பது. இஃதில்லையேல் கடவுளிட நோக்கம் நிறைவேறாது ; மாந்தரும் அறவாழ்வு நடத்தி அமரவாழ்வெய்தமுடியாது.

கடவுளை உண்மையாக—பஞ்சபூத சாக்ஷியாக நினைப்பவனுக்கு "நான் செய்தேன் ; நான் கெட்டிக்காரன் ; நான்

கேட்டேன்; நான் சேத்தேன்" என்பதே கிடையாது. உண்ணும்போது சாதம் தொண்டையிலடைத்துக்கொண்டு உயிர் போகாமல் காப்பாற்றுவோன் பகவான்; உறங்குகையில் பாம்பு கடித்துச் சாகாமலும், தேள் கடித்து அவதிப்படாமலும், வீடு இடிந்து விழ்ந்து நசுங்கிப்போகாமலும், பயங்கரக்கனவு கண்டு கட்டிலிலிருந்து விழுந்து மண்டை உடையாமலும் காப்பாற்றுவோன் பகவான்; மோட்டார் பஸ்ஸிலிலோ, ஸைகிலின்பேரிலோ, குதிரையின்பேரிலோ, இரட்டை மாட்டு வண்டியிலோ தமாஷாகப் போய்க்கொண்டிருக்கிறோம். திடீரென்று சாய்ந்து விழுந்து கால் போகக்கூடாதா, கை ஒடியக் கூடாதா? இடுப்பு ஒடிந்து படுக்கக் கூடாதா? எதுவும் நேரலாம். இவையனைத்தும் முன்னெச்சரிக்கை நோட்டீஸின்றியே நடப்பவை. நாம் கண்ணைமூடிக் கொண்டு போகிறோமே யொழிய வரும் இடுக்கண்களைத் தடுப்போன் பகவான். பரிமாறும் வரையில் ஒரு இலையில் நாம் உட்கார்ந்திருக்கிறோம்; சாப்பிடக் கைவைக்கவேண்டும். அப்போது "அடுத்த இலைக்குப் போ" என்று உத்திரவு பிறக்கிறது. இதுவரையில் நம் கண்முன்பிருந்த உண்டி நமதல்ல! நம் கைக்குப் பணம் வந்து கொண்டிருக்கிறது "இப்போது கொடுக்காதே" என்று ஒருவன் தடுக்கிறான்; பணம் அப்படியே நின்று விடுகிறது. நாம் இன்றெல்லாம் பாடுபட்டாலும் நினைத்தது நினைத்தபடி நடப்பதில்லை. எதுவரினும் பகவானிடம் கருணையின் பேரில் ஒரு நம்பிக்கை, எப்போதும் பகவான் காட்டும் வழி என்னும் உறுதி, பகவான் உள்ளத்தில் உளான் என்னும் சந்தோஷம் இவை எவனிடம் உண்டோ அவனுக்கு சுகதுக்க சஞ்சலம் அதிகமில்லை. அவ்வப்போது "இதோ! இதை இப்படிச் செய்" என்று பகவான் உள்ளத்தினின்று சொல்லிவரும் கடமைகளை, முழு மனத்துடன், சந்தோஷத்துடன், தைரியத்துடன் வாழ்வின்

ஒவ்வோர் அம்சத்தைப்பற்றியும் நினைக்க நினைக்க புதுப்புது குதூகலத்துடன் செய்து வருவான். இவனுக்கு தன்னைப் பற்றியே—தன் தவறுதல்களைப் பற்றியே—தன் கடமைகளைப்பற்றியே எப்போதும் சிந்தனை; பிறரைப்பற்றி இவ்வளவில்லை. தான் இப்போது இருக்கும் நிலைமையைப் பற்றி மகா சந்தோஷம்; இதைவிட அதிகமாக இருக்கக் கூடாதாயென்னும் யோசனையேயில்லை. வீடு கட்டினவன் நானல்ல; வீடுகட்ட எண்ணங் கொடுத்தவனும், வீடு கட்டப் பணமளித்தவனும், ஒழுங்காக வீடு கட்டி முடித்தவனும், வீட்டில் இப்போது இருப்பவனும் பகவான். நிலத்தை வாங்க சௌகரியங்கள் அளித்தவன் பகவான்; தருணத்தில் விதை விதைக்கச் செய்தவனும் பகவான். காலமாரிகளை யளித்தவனும் அவனே. சரியான ராசியை அளந்து கொட்டினவனும் அவனே. கடன் கொடுத்தவன் பகவான்; அதை அவ்வாறு செலவு செய்ததும் அவனிட ஆக்ஞையாலே; இதை நீ உறுதியாய் நம்பி "என்னால் ஒன்றுமில்லை" என்று நினைப்பாயாகில் கடன் கொடுத்த பகவான் கடனைத் தீர்க்க வழியை இதோ காட்டுகிறார். அப்படிச் செய்; அவர் அருளால் அனைத்தும் நன்மையே. இதைவிட்டு முழு பொறுப்பையும் நீயே சுமக்கப் பார்த்தால் போச்சு; விழுந்தது உன் தலையின்பேரில் ஒரு பெரிய மலையளவு பாரம்.

அத்தியாயம் 9.

திடசித்தம் வேண்டும்

இதனுல்தான் பகவான் அர்ஜுனனைப் பார்த்துச் சொல்லுகிறுர். "பார்த்தா! நீ சாதாரண மானிடன். ஒரு துரும்பைச் சுமக்கவும் சக்தியற்றவன். உன்னிச்சைப்படி நீ எதையும் செய்ய அசக்தன். நான் செய்கிறேன் பார் என்று சொல்வோன் வாயில் மண்தான். ஒரு சிறு துரும்பையும் அசைக்க உன்னுல் முடியாது; எந்த பொறுப்பையும் நிர்வகிக்க நீ அருகனல்லன். இதோ பார்! நான் இவ்வுலகைப் படைத்துக் காப்பவன். உலகை ஊக்குவிக்கவும், சீர்திருத்தவும், நிர்மூலமாக்கவும் என்னிடம் இருக்கிறது சக்தி. ஈரேழுலகங்களிலுள்ள தேவர், மானிடர், விலங்குகள், புழு பூச்சி செடி கொடி ஒவ்வொரு அம்சங்களின் தலை யெழுத்தும் என் பேனு முனையிலிருக்கிறது. எந்த பொறுப்பை நிர்வகிக்கவும் எனக்கு சக்தியுண்டு. வீணில் அவதிப்படாமல் உன் வருத்தங்களை யெல்லாம் என்னிடம் சொல்லு; உன் தேவைகளை என்னிடம் தெரிவி. உன் பொறுப்புகளை என் தலைமேல் தள்ளு. அப்போது பார் உன் மனம் சஞ்சலம் நீங்கி, அர்த்தமில்லா பேயாட்டம் பறந்துபோய் நிர்மலமாய்விடுகிறது. அந்த இடத்தில் (உன்மனதில்) என்னை அழைத்து உட்கார வை. நீ செய்யவேண்டிய கடமைகளைத் தெரிவிக்கிறேன். நான் சொல்லும்வண்ணம் செய்து வா. நல்லதா கெட்டதா யென்று கேள்வி கேட்காதே. பயனைப்பற்றி சந்தோஷமோ, துக்கமோ கொள்ளாதே. அப்போது பார் உன் கோரிக்கைகளுக்கு ஆயிரம் மடங்கு மேன்மையாகவே ஒவ்வொன்றும் நடக்கும். என் ஆணையின்றி ஈரேழுலகங்கள் ஒன்றுகச் சேர்ந்து வந்தாலும் உன்னை அசைக்க முடியாது. உன்னைத்

தொட்டுப் பார்க்க முடியாது; உன்னிட திரேகத்தின்மே லுள்ள ஒரு சிறு கூந்தலுக்கும் தீங்கு வராது. உனக்குத் தீங்கு நேரவேண்டு மென்பது என் எண்ணமாயின், ஈரே ழுலகத்தாரும் சேர்ந்து உன்னைக் காப்பாற்றப் பார்த்தாலும் என் பார்வையிலிருந்தும் நீ தப்ப முடியாது. நான் கோபித் தால், என் கோபத்தைத் தீர்க்கப் பாடுபடு; உலகத்தார் நிந்திப்பார்களென்றால் அவர்களாக உன்னை ஒன்றும் செய்ய முடியாதென்பதைத் தெளிந்துகொள். ஆகையால் மைந்தா! உன் கடமைகளை நான் சொல்லும் வண்ணம்தான் நீ செய்ய வேண்டும்; செய்யமாட்டேன் என்று சொல்ல உனக்கேது அதிகாரம்? உனக்கு இஷ்டமில்லாவிட்டாலும் உன்மூலமா கவே செய்து முடிக்க எனக்கு வல்லமை யுண்டு. இதோ திரும்பிப் பார் என்னை" என்று பகவான் ஆணையிட்டதும், திரும்பிப் பார்த்தான் பார்த்தன். "ஐயோ என்னப்பா" என்றலறிக்கொண்டு தேரில் சாய்ந்தான். உலகிலுள்ள சேனை கள் அனைத்தும் திரண்டு வந்தாலும் கலங்காத வீரன், இப் போது ஈரேழு புவனங்களையும் தனது உள்ளங்கையில் காட்டி நிற்கும் வேந்தனைக் கண்டு நடுநடுங்கினான். உடனே மாயன் புன்னகையுடன் அர்ஜுனனை மார்புறத்தழுவி, "மைந்தா! அஞ்சேல்! என் சக்தியைக் காட்டினேன். நீ வேறு நான் வேறல்ல. நீயே நான்; நானே நீ; மன மொழி மெய்த் தூய் மையுடன் எவன் என்னை எப்போது நினைத்தாலும் அப் போதே அவனிடம் செல்வேன்; அவன் துயர் நீக்குவேன். இதோ என்னை மறுபடியும் பார்! நான் உன் மாமன்தா னப்பா? ஏதாவது பெண் வேண்டுமா?" என்று கேலி செய் யவே பார்த்தனும் பயந்தெளிந்து எழுந்து நின்று இரு கரங் குவித்து "ஐயனே! 'நான்' என்னும் பொருளே யில்லை; உன் எண்ணம் எவ்வாறோ அவ்வாறே நடக்கட்டும்" என்று தலை குனிந்து நின்றான். இதுதான் பரிபூர்ண சரணாகதி (Perfect resignation). இதற்கு வேண்டியது திடசித்தம். திட

சித்த மொன்றுண்டாகில், உலகில் பாதியை விலைக்கு வாங்கி விட்டதாகவே கருதலாம்.

மேல் நாட்டினர் நிறுவியுள்ள நிர்வாண சங்க இயக்கத்திற்கும் திடசித்தம் வேண்டும். திடசித்தம் உண்டாகில் யௌவன பெண்ணொருத்தி நிர்வாணமாக நர்த்தனம் செய்தாலென்ன? அவளிட ஸ்தனங்கள்தான் நம்மீது துள்ளினுலென்ன? மர்ம ஸ்தானங்களை நாம் கண்ணாரக் கண்டால்தானென்ன? ஆரோக்கியத்தின் பேரிலேயே கண்ணுங் கருத்துமா யிருந்தால், நிர்வாணக் கோலம்தான் என்ன அனர்த்தங்கள் செய்துவிடும்? ஒன்றுமேயில்லை. இவ்வளவுமட்டில் திடசித்தம் அடைய வேண்டுமே! அதுதான் ஒரு பெரிய கவலை. நிர்வாண சங்கங்களினுல் நன்மைகளும் அநேகம்தான். மறைத்து மறைத்து வைப்பதன் மூலம் மர்ம ஸ்தானங்களுக்கேற்பட்ட மர்மம் பூர்ணமாக அற்றுப்போய் விடுகிறது. ஆண் பெண் மர்ம ஸ்தானங்கள் மற்ற அவயவங்களைப் போலவே சர்வ சாதாரணமாய் நினைக்கப்படுமே யொழிய அவை அசங்கியமானவை யென்றோ, வாயால் சொல்லவும், கண்ணுல் பார்க்கவும் தகாத வஸ்துக்கள் என்றோ கருதப்படுவது ஒழிந்துவிடும். சங்கத்துள் சேர்ந்துகொள்ளும் சிறுவர் சிறுமியருக்கு ஆண் பெண் நிர்வாண கோலம் சர்வ சாதாரணமாகவே தோன்ற மார்க்க மேற்பட்டு விடுகிறது. பாதி நிர்வாண கோலத்தாலோ, மூடி மூடி வைத்து மோக மூட்டுவதாலோ ஏற்படும் விபசாரங்கள் அடியோடு ஒழிந்துவிடும். ஆடைகளைப் போட்டு அழகில்லாதவள் அழகியாகவும், ஆரோக்கியமில்லாதவள் ஆரோக்கியசாலியாகவும் வெளிப்பகட்டு செய்வது ஒழிந்து, உண்மையாகவே ஒவ்வொருவரும் நல்ல ஆரோக்யத்தையும், அழகையும் பெற பெரு முயற்சி இச்சங்கங்களில் செய்வார்கள். இச்சங்கங்களின் அடிப்படைக் கொள்கைகள் மேன்மை பொருந்தியவைதான்; அனுஷ்டானத்திற்குக் கொண்டுவர வேண்டுமானுல் ஒரே நோக்கத்தில்

கண்ணும், மன வுறுதியும் அத்தியாவசியம். இத்தகைய மன வுறுதியும், ஆரோக்ய மென்னும் ஒரே நோக்கத்தின்மேல் பஞ்ச பூதங்களை செலுத்தும் வன்மையையும் இச்சங்க வாழ்க்கை அளிக்கிறதென்று மேல்நாட்டு அனுபவசாலிகள் சொல்லுவதை நாம் ஒருவாறு ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும்.

ஆண் பெண் இன்பம், சதிபதிகள் இன்ப வாழ்க்கை, ஆரோக்யமுள்ள சந்ததிகளைப் பெறும் வழி, ஆண் பெண் திரேக தத்துவ ஆராய்ச்சி, கலவி யின் பம், ஆரோக்ய வழி, ஆண் பெண்களிட திரேகத்தி லுள்ள அற்புதங்கள் என்னும் தலையங்கங்களுடன் நாம் சிறு சிறு நூல்களைப் பிரசுரிக்கத் தீர்மானித்திருக்கிறோம். மாத மொருமுறை வெளியாகும் இந்நூல்களை தபால் மூலமாக நேராகப் பிரசுராலயத்திலிருந்து பெற விரும்பு வோர் ரூ. 1—4—0 மணியார்டர்மூலம் அனுப்புவார் களாயின் அவர்களிட விலாசத்தை நாங்கள் பதிவு செய்துகொண்டு நூல் ஒவ்வொன்றும் பிரசுரமானதும் உடனே புக்போஸ்டு மூலம் பனிரெண்டு தனித்தனி நூல்களை அனுப்புவோம். இதே புஸ்தகத்தின் பிரதிகளை வேண்டுவோர் புஸ்தகத்தின் கிரயம் 1-அணு, புக்போஸ்ட் சார்ஜ் 9-பை ஆக 0—1—9 ஸ்டாம்பு மூலம் அனுப்பிப் பெறலாம். மற்ற விவரங்களுக்கு கீழ்கண்ட விலாசத்துக் கெழுதலாம்.

மானேஜர்,

இந்தியன் பிரசுராலயம்,

ராமமூர்த்தி நகர், பொம்மிடி P. O.,

சேலம் ஜில்லா.

கேசரி அச்சுக்கூடம், சென்னை.

ஏஜெண்டுகள் தேவை

மிகவும் ருசிகரமான விஷயங்களைப் பற்றி சிறு சிறு நூல்களை மிக மிகக் குறைந்த விலையில் மாதாமாதம் பிரசுரிக்க வேண்டுமென்பது நமது ஆவல். தமிழ் நாடு முழுவதும் நமது பிரசுரங்களை விற்பனைசெய்ய ஏஜெண்டுகள் தேவை. மொத்தமாக வாங்குவோருக்கும், ஏஜெண்டுகளுக்கும் கூடியவரையில் அதிகமாகவே கமிஷன் கொடுக்கத் தயாராயிருக்கிறோம். டிபாசிட் ஒன்றும் கட்டவேண்டியதில்லை. விவரம் வேண்டுவோர், கீழ்க்கண்ட விலாசத்திற் கெழுதினால் உடனே நமது நிபந்தனைகளைத் தெரிவிக்கத் தயாராயிருக்கிறோம்.

மானேஜர்,

இந்தியன் பிரசுராலயம்

ராமமூர்த்தி நகர்

பொம்மிடி போஸ்டு, சேலம் ஜில்லா.

64-பக்கங்களுடன்

சதி பதிகள் இன்பம்

(விலை 1 அணா)

விரைவில் வெளிவரும்.

1. கலவியின்பத்தில் வேண்டிய இன்பம் அடைவதெப்படி?

2. பெண்களில் சிலர் ஏன் விபசாரம் செய்கின்றனர்?

3. பல நாட்டுப் பெண்களின் திரேகத்திலுள்ள மர்மமான மாறுதல்கள் என்ன?

4. பெண்ணுக்கு இருக்கவேண்டிய லக்ஷணங்கள் என்னென்ன?

5. காமம் என்றால் என்ன? காதலுக்கும் இதற்குமுள்ள வித்தியாசம் யாது?

இம்மட்டோ? இன்னும் அநேக ருசிகரம். சொற்ப பிரதிகளே அச்சிடப்போவதால் தனிபிரதி வேண்டுவோர் இரண்டணா ஸ்டாம்புகளை அனுப்பிவைத்தால் பிரசுரமானவுடன் காபி அனுப்பிவைக்கப்படும்.

ஏஜெண்டுகளாயிருக்க வேண்டுவோர் நிபந்தனைகளுக் கெழுதலாம்.

இந்தியன் பிரசுராலயம்

ராமமூர்த்தி நகர்

பொம்மிடி போஸ்டு, சேலம் ஜில்லா.